# THARAKA

## லீலாவதி வானசாஸ்திரம்




நட்சத்திர மண்டலம்.

மாயவரம் குழந்தை V. சுப்பிரமணிய சாஸ்திரி
அவர்கள் எழுதியது.

1947

விலை 0 12 0

# தாரகை

லீலாவதி : நட்சத்திரங்களின் பெயர்களை வரிசையாகச்
ல் ?

தாதா : அச்வதி, பரணி, கார்த்திகை, ரோஹிணி, ்கசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், ,பூரம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், ஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திரு ணம். அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, தி, ஆக 27 நட்சத்திரங்கள். இவைகள் வானத்தில் கிலிருந்து கிழக்காகக் காணப்படுகின்றன.

லீலாவதி : ராசிகளின் பெயர்களைச் சொல் ?

தாதா : மேஷம், விருஷபம், மிதுனம், கடகம், சிம்மம், ன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், ஆக 12 ராசிகள். ராசிகளும் மேற்கிலிருந்து கிழக்காகக் காட்டப்படுகிறது. $2\frac{1}{4}$ நட்சத்திரம் ஒரு ராசி.

லீலாவதி : நவக்ரஹங்களின் பெயர்களைச் சொல் ?

தாதா : சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, க்கிரன், சனி, ராகு, கேது, ஆக 9க்ரஹங்கள். இவை ளும் வானத்தில் காணப்படுகிறது.

லீலாவதி : தமிழ் மாதங்களைச் சொல் ?

தாதா : சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, ட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, ங்குனி. ஆக 12 மாதங்கள். ராசிகளும், மாதங்களும் ன்றுதான்.

லீலாவதி : நட்சத்திரங்களை எப்படி வானத்தில் நாம் பார்த்துத் தெரிந்து கொள்வது ?

தாதா : அச்வதியிலிருந்து 27 நட்சத்திரங்கள் சொன் னேன். சந்திரன்தான் நட்சத்திரங்களை குறிக்கிறது. ஒவ்வொரு நாளும் சந்திரன் ஓர் நட்சத்திரத்தில் ஊர்ந்து

வருமபோது வானத்தில் நட்சத்திரத்தை நாம் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**லீலாவதி :** ராசிகளை எப்படி வானத்தில் தெரிந்து கொள்வது ?

**தாதா :** சூரியனைக் கொண்டு ராசிகளைப் பிரிக்கிறோம், 2¼ நட்சத்திரம் ஒரு ராசி. 27 நட்சத்திரங்கள் 12 ராசிகளாகப் பிரிக்கப்படுகிறது. சந்திரனைக்கொண்டு அச்வதி பரணி, சொல்வதுபோல சூரியனைக் கொண்டு மேஷம், விருஷபம் அல்லது சித்திரை, வைகாசி என்று ராசிகளை வானத்தில் குறிக்கிறோம்.

**லீலாவதி :** ராசிகளையும், நட்சத்திரங்களையும் எப்படி ஊஹித்துக் கொள்வது ?

**தாதா :** பூமிக்கு இரண்டு வில் போல் ஊஹிக்கலாம்.

நாம் ஆகாயத்தை பார்க்கிறோமல்லவா? பகலில் ஓர் வில்லாகவும் இரவில் ஓர் வில்லாகவும் ஊஹித்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு வில்களையும் ஒன்றாக்க வேண்டும். இதற்கு 360°டிகிரி உள்ள வான வட்டம் ஏற்படும். வான வட்டத்தில் 27 நட்சத்திரங்களும் 12 ராசிகளும் 9க்ரஹங்களும் காணப்படும் என்றாள்.

**லீலாவதி :** வான வட்டத்தை படமாக வரைந்து அதில் க்ரஹங்களையும் ராசிகளையும் நட்சத்திரங்களையும் குறிப்பிட முடியுமா ?

**தாதா :** முடியும். வட்டம் என்பது 360°டிகிரி; பூமியை நடுவில் வட்டமாகப் போடவேண்டும். அதன் மேல் மற்றொரு வட்டம் போடவேண்டும். வான வட்டத்தை 12 ஆக பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பாகமும் 30°டிகிரிகளாகும். இதை ராசிகள் என்கிறோம். 360°டிகிரிகளையும் 27 ஆல் வகுக்க வேண்டும். ஒவ்வொரு பாகமும் 13⅓°டிகிரிகளாகும். இதை நட்சத்திரம் என்கிறோம்.

**லீலாவதி :** ராசிகளை வான வட்டத்தில் எப்படி ரூபங்களோடு வரைந்தாய் ?

**தாதா :** ராசிகளின் பெயராலேயே ரூபங்களை வரைந்தேன். முதல் 30°டிகிரிவரை மேஷராசி, ஆட்டின் படம். 30° முதல் 60° வரை விருஷபம், மாட்டின் படம். 60° முதல்

90° வரை மிதுனம், ஆண் பெண்படம். 90° முதல் 120° வரை கடகம், நண்டின் படம். 120° முதல் 150° வரை சிம்மம், சிங்கத்தின் படம். 150° முதல் 180° வரை கன்னி, கன்னிப் பெண் படம். 180° முதல் 210° வரை துலாம், தராசின் படம். 210° முதல் 240° வரை விருச்சிகம், தேளின் படம். 240° முதல் 270° வரை தனுசு, வில்லின் படம். 270° முதல் 300° வரை மகரம், முதலையின் படம். 300° முதல் 330° வரை கும்பம், குடத்தின் படம். 330° முதல் 360° வரை மீனம், இரட்டை மீன் படம்.

**லீலாவதி :** ராசிகளுக்கு ரூபத்தை வானத்தைப் பார்த்தா போட்டாய் ?

**தாதா :** வானத்தைப் பார்த்து ராசிகளின் ரூபங்களைப் போடவில்லை. ராசிகளின் பெயராலேயே ரூபங்களைப் போட்டேன். வானத்தைப் பார்ப்பதால் ராசிகளின் ரூபம் தெரிவதில்லை. தலைக்கு நேராகக் காணப்படும் நட்சத்திரக் கூட்டங்களை எந்த ராசியாக பாவித்தாலும் மனதில் அப்படியே தோன்றுகிறது. நீங்களும் ராசிகளைச் சொல்லும் போது ராசிகளின் உருவத்தை வானத்தில் தெற்கு வடக்காகவோ, கிழக்கு மேற்காகவோ, அல்லது ராசிகளின் கால் பக்கம், என்றோ அல்லது ராசிகளின் ப்ரகாசமான பாகம், மங்கலான பாகம், என்றோ சொல்லாததால் ராசிகளின் பெயர்களாலேயே உருவம் போட்டேன் என்றாள்.

**லீலாவதி :** நட்சத்திரங்களுக்கு ஏன் உருவம் போடவில்லை ?

**தாதா :** நட்சத்திரங்கள் ராசிகளுக்கு உள்ளடங்கியவை. ராசி தெரிந்துகொண்டால் நட்சத்திரங்களை அனுமானிக்கலாம். சில நட்சத்திரங்களால் வானத்தில் அடையாளம் தெரிகிறது. சில தெரியவில்லை. 27 நட்சத்திரங்களும் 24000 மைல்கள் கிழக்கு மேற்கு, நீளத்தில் உள்ள பூமியின் வான வட்டத்தில் காணப்பட்டாலும், 27 நட்சத்திரங்களின் அடையாளம் தெரியவில்லை. கார்த்திகை நட்சத்திரம் தெரிகிறது. அதை வைத்துக்கொண்டு முன்னால் 2 நட்சத்திரங்களையும் பின்னால் 2 நட்சத்திரங்களையும் ஊஹிக்கிறோம். மக நட்சத்திரம் தெரிவதால் முன் 2 நட்சத்திரத்தையும் பின் 2 நட்சத்திரத்தையும் ஊஹிக்கலாம். சுவாதி நட்சத்திரம் தெரிவதால் முன்பின் உள்ள 4 நட்சத்திரங்

களையும் ஊஹிக்கலாம். நட்சத்திரங்களுக்கு ராசிப் பெயர்கள்மாதிரி இல்லை, அச்வதி என்றால் குதிரை. அச்வதி நட்சத்திரம் குதிரை முகம்போல்! என்று சொல்லும்போது வித்தியாசம் இருக்கிறது. பரணி என்றால் தெரியவில்லை. இதை ஸம்ஸ்க்ருத பதமாக வைத்து அர்த்தம் செய்கிறார்கள். இது சரியா?! கார்த்திகை என்றால் பெண். கிருத்திகா நட்சத்திரம் கூட்டமாக வானத்தில் தெரிவதால் அடுக்கு தீபம் என்கிறார்கள். ரோஹிணி என்றால் பெண் என்கலாம். இதற்கு என்ன உருவம் போடுவது? மிருக சீர்ஷம் என்றால் மான் தலை. மான் தலைபோல் உருவம் போட்டால் எந்தப் பக்கம் தலையை போடுவது. பூராடம், உத்திராடம் என்றால் என்ன உருவம் போடுவது? அதனால்தான் பொதுவாக நட்சத்திரங்களுக்கு உருவம் போடவில்லை.

**லீலாவதி** : வானத்தில் க்ரஹங்களை எப்படி காண்பிப்பாய்?

**தாதா** : சூரியன் முதல் க்ரஹம். சூரியன் காலை 6 மணிக்கு 0° டிகிரியில் கிழக்கே சமுத்ர மட்டத்தில் தெரிகிறது. பகல் 12 மணிக்கு 90°வது டிகிரியில் தலைக்கு நேராகத் தெரிகிறது. சாயந்திரம் 6 மணிக்கு சூரியன் 180° டிகிரியில் மேற்கே அஸ்தமிக்கிறது. இரவு 8 மணிக்கு சூரியன் 210°வது டிகிரியில் வான வட்டத்தில் இருக்கிறது. அப்போது மற்ற க்ரஹங்களை வானத்தில் பார்க்கலாம். சூரியன் 1 மணிக்கு 15°டிகிரிவீதம் சமுத்ர மட்டத்திலிருந்து மேற்கே நகர்ந்து வருகிறது. பகல் 12 மணியில் 180°டிகிரி தூரம் சூரியன் மேற்கே வருவதை நாம் பார்க்கிறோம். இரவு 12 மணியில் 180°டிகிரியிலிருந்து 360°டிகிரியை ஊர்ந்து, மறுநாள் உதயத்தைப் பார்க்கிறோம். வானத்தில் சூரியன் தலைக்கு நேராக வரும்போது பூமியை குடையால் மூடியது போல எண்ணுகிறோம். பௌர்ணமி தினத்தில் இரவில் 12 மணிக்கு சந்திரன் தலைக்கு நேராக வரும்போதும் பூமியை குடையால் மூடியதுபோல எண்ணுகிறோம். இரவில் தான் ஆகாசத்தை குடைபோல எண்ண முடிகிறது. குடைபோல் காணப்படும் ஆகாசம் கிழக்கு, மேற்கு 180°டிகிரி. தெற்கு, வடக்கு 180°டிகிரி என்று வைத்துக் கொள். பூமிக்கு இரட்டை குடைகள் போல் தெரியும் வானத்தில் 27 நட்சத்திரங்களும் இருக்கிறது. குடைபோல் தெரியும் வானத்தில் 13½ நட்சத்திரங்கள் அடைக்கப்பட்

டிருக்கிறது. மற்றொரு குடையிலும் $13\frac{1}{2}$ நட்சத்திரங்கள் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நட்சத்திரத்தின் கிழக்கு மேற்கு $13\frac{1}{3}^\circ$ × தெற்கு வடக்கு $180^\circ$டிகிரிகளாகும் என்றாள்.

**லீலாவதி :** வானத்தில் சந்திரன் பெருகுவதையும் குறைவதையும் சொல் ?

**தாதா :** சந்திரன் அமாவாசை தினமும் மறுநாள் ப்ரதமையிலும் வானத்தில் தெரியாது. மூன்றாவது நாள் சந்திரன் மேற்கே வானத்தில் தெரிகிறது. இதை பிறை என்கிறோம். நான்காவது நாள் சந்திரன் ப்ரகாசமாகத் தெரிகிறது. ஒவ்வொரு நாளும் சந்திரன் இரவு 8 மணிக்கு மேற்கிலிருந்து கிழக்கே நகர்ந்தும் ப்ரகாசமாயும் தெரிகிறது. இப்படி 15 நாள் வானத்தில் சந்திரனைப் பார்க்கும் போது, சமுத்ர மட்டத்தில் பூர்ணமாகத் தெரிகிறது. 16வது நாளிலிருந்து சந்திரன் குறைந்து விடுகிறது. குறையும் சந்திரனைக் காலையில் பார்க்கலாம். குறையும் சந்திரனும் மேற்கிலிருந்து கிழக்கே நகர்ந்திருப்பது தெரிகிறது. அமாவாசையிலிருந்து 15 நாள் சந்திரன் பெருகியும், பௌர்ணமியிலிருந்து 15 நாள் சந்திரன் குறைந்தும் வருகிறது இரண்டுநாள் சந்திரன் தெரியாது என்றாள்.

**லீலாவதி :** எந்த மாதத்தில் சந்திரனை வானத்தில் கவனித்தாய் ?

**தாதா :** சித்திரை மாதத்தில் சந்திரனை வானத்தில் கவனித்தேன். சித்திரை மாதம் 1ம் தேதி அமாவாசை. 1ம் தேதி அச்வதி நட்சத்திரம். மறுநாள் 2ம் தேதி பரணி. 3ம் தேதி மூன்றாவது நாள் கார்த்திகை. அன்றய தினமே வானத்தில் சந்திரனைப் பார்த்தேன் என்றாள்.

**லீலாவதி :** சுக்லபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் என்பதை எப்படிச் சொல்லுகிறோம்.

**தாதா :** அமாவாசையிலிருந்து பௌர்ணமிவரை சுக்கில பக்ஷம் என்கிறோம். பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரை க்ருஷ்ண பக்ஷம் என்கிறோம். சூரிய சந்திரர்களுடைய தூரமே திதிகளாக எண்ணப்படுகிறது. சூரியனிலிருந்து $12^\circ$டிகிரி தூரத்தில் சந்திரன் இருந்தால் ப்ரதமை முடிந்து த்விதியை என்று சொல்லவேண்டும். சூரியனிலி

ருந்து சந்திரன் 90°வது டிகிரி தூரத்தில் இருந்தால் ஸப்தமி ஆகி அஷ்டமி திதி என்கிறோம். $\frac{90}{12}=7\frac{1}{2}$ : என்றாள்.

**லீலாவதி :** வானத்தில் நட்சத்திரங்களை எவ்விடத்தி லிருந்து ஆரம்பிப்பது ?

**தாதா :** அச்வதியிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். சந்தி ரன் தினம் ஓர் நட்சத்திரத்தில் ஊர்ந்து வருவதால் அச்வதி, பரணி என்று எண்ணுகிறோம். இதை வானத்தில் மேற்கி லிருந்து கிழக்காக காட்டுகிறது. நீயே வானத்தில் காண் பித்திருக்கிறாயே! ரோஹிணி, அதன் கிழக்கே வானத்தில் மிருகசீர்ஷம், அதன் கிழக்கே திருவாதிரை என்று; பொதுவாக 27 நட்சத்திரங்களையும் மேற்கிலிருந்து கிழக் காக வானத்தில் சந்திரனைக்கொண்டு பார்க்கலாம்.

**லீலாவதி :** சூரியன் வானவட்டத்தில் ஊர்ந்து வருவதை கவனித்திருக்கிறாயா ?

**தாதா :** பள்ளிக்கூட பாடங்களில் சூரியன் சுற்றுது என்கிறார்கள். பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் பகலும் இரவும் உண்டாகிறது. பூமி தன்னைத்தானே எப்படி சுற்றும் இதற்குக் காணம் என்ன ? என்றால் பூமி சுற்றத்தான் வேண்டும் என்கிறார்கள். பூமி சுற்றாவிட்டால் இரவு பகல் ஏற்படாது. சூரியன் தினம் பூமியைச் சுற்ற வில்லை. பூமி தன்னைச் சுற்றிக்கொண்டு சூரியனையும் ஒரு சுற்று வரும்போது ஒரு வருஷம் என்கிறார்கள். தாதா என்னோடு படிக்கும் பிள்ளைகளைக் கேட்டால் அவர்களும் பூமி சுற்றுகிறது என்கிறார்கள். எனக்கு பூமி சுற்றுகிறது என்பது ஒப்புக்கொள்ள முடியவில்லை. நவக்ரஹங்கள் வானத்தில் ஊர்ந்து வருவது தெரிகிறது. நவக்ரஹங்களின் ஓட்டத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களே பூமி ஓடுகிறது, சுற்றுகிறது என்பார்கள். நவக்ரஹங்களின் ஓட்டத்தைத் தெரிந்து கொண்டவர்களும் பூமி சுற்றிக்கொள்கிறது, ஓடு கிறது என்றால் ஆராய்ச்சி செய்ய அனுகூலமாக இருக்கும். தாதா சூரியன் வானவீதியில் ஊர்ந்து வருவதை நான் கவனித்திருக்கிறேன். சூரியன், சந்திரன், அச்வதி நட்சத் திரம், இந்த மூன்றும் சித்திரை மாதம் 1உ அமாவாசையை குறிக்கிறது. கார்த்திகை நட்சத்திரம், சூரியன், சந்திரன், வைகாசி மாதம் 1-ம் தேதி அமாவாசையை குறிக்கிறது. மிருகசீர்ஷம், சூரியன் சந்திரன் ஆனி மாதம் 1உ அமா

வாசையை குறிக்கிறது. புனர்பூசம், சூரியன் சந்திரன், ஆடி மாதம் 1௳ அமாவாசையை குறிக்கிறது. சந்திரனைப்போல சூரியனும் வானத்தில் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. சூரியன் 27 நட்சத்திரங்களிலும் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருவதை ஒரு வருஷம் என்கிறோம். அமாவாசை $29\frac{1}{2}$ நாளுக்கு ஒரு தடவை ஏற்படுகிறது. 12 அமாவாசைகள் ஆகும்போது 354 நாட்கள் ஆகிறது. அச்வதியிலிருந்து சந்திரன் மறுபடியும் அச்வதி நட்சத்திரம் வந்து சேர $27\frac{1}{3}$ நாட்கள் ஆகிறது. சூரியன் அச்வதியிலிருந்து மறுபடியும் அச்வதி நட்சத்திரம் வந்து சேர 365 நாட்கள் 15 நாழிகை 31 விடி 15 தர்ப்பரைகள் ஆகிறது. பூமி சுற்றவில்லை. சூரியன்தான் ஊர்ந்து வருகிறது என்றாள்.

**லீலாவதி :** சூரியன் தினம் வானத்தில் எவ்வளவு தூரம் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது ?

**தாதா :** சூரியன் தினம் 1°டிகிரி மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. சந்திரன் தினம் $13\frac{1}{3}$டிகிரி மேற்கிலிருந்து கிழக்கே நகர்ந்து வானத்தில் காணப்படுகிறது. ஒவ்வொரு 30°வது டிகிரியிலும் சூரியனும் சந்திரனும் சேர்ந்து கொள்கிறது. இதை நாம் மாதமாகவும், ராசியாகவும் சொல்லுகிறோம்.

**லீலாவதி :** சூரியன் தினம் 1°டிகிரியும் சந்திரன் $13\frac{1}{3}$°டிகிரியும் வான வட்டத்தில் ஊர்ந்தால் அவைகள் எதனால் மேற்கே அஸ்தமிக்கிறது ?

**தாதா :** இந்த விஷயம்தான் கஷ்டம். இதில் மேல்நாட்டார்கள் ஆராய்ச்சித்தான் சௌகரியம். பூமி சுற்றுகிறது என்கிறார்கள். பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் சூரிய சந்திரர்கள் மேற்கே அஸ்தமிக்கலாம். ஆனால் சில காரணங்கள் சரியாக இல்லை. 1 பூமி மேற்கிலிருந்து கிழக்காக சுற்றவேண்டும். சூரிய சந்திரர்களே மேற்கே அஸ்தமிக்கலாம். ஆனால் காற்று மேற்கிலிருந்து கிழக்கே அடிக்க முடியாது. 2. பூமி சுற்றுவதால் அடிக்கடி அதிர்ச்சி ஏற்படவேண்டும். 3. பூமி சில சமயம் வேகமாகவும், மெதுவாகவும் சுற்றலாம். இதனால் காலம் மாறி

விடும். 4. மழை 1 மணி நேரம் பெய்தால் மேற்கிலிருந்து கிழக்காக உள்ள 1000 மைல்கள்வரை மழை பெய்ய வேண்டும். இப்படி ஏற்படவில்லை. 5. ஆகாய விமானம் 1 மணி நேரம் பறந்தால் அதன் சொந்த வேகத்தைத் தவிர 1000 மைல் மேற்கே தள்ளப்பட வேண்டும். பக்ஷிகளும் ஆகாயத்தில் பறப்பதால் பூமியில் இறங்கும்போது இடம்மாறி இறங்கவேண்டும். இவைகள் எதுவும் ஏற்படாததால் பூமி சுற்றவில்லை என்கலாம். மேல் நாட்டார்களோ பூமி எல்லா வஸ்துக்களையும் ஆகர்ஷித்துக்கொண்டு சுற்றுகிறது என்கிறார்கள். பூமி சுற்றுகிறது என்பது 200 வருஷங்களாகச் சொல்லப்படுகிறது என்றாள்.

**லீலாவதி :** சூரிய, சந்திரர்கள் எப்படித்தான் மேற்கே அஸ்தமிக்கிறது ?

**தாதா :** பூமியானது தெற்கு, வடக்கில் பனியால் உறைந்து இருக்கிறது. உறைந்த பாகத்தால் பூமி ஆகாயத்தை பிடித்துக் கொண்டிருப்பதாகச் சொல்ல முடியவில்லை. வான மண்டலம் ஒரு சுற்று சுற்றலாம். மேலே ஆராய்ந்து பார்ப்போம்.

**லீலாவதி :** செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய க்ரஹங்களை வான வீதியில் நீ பார்த்திருக்கிறாயா ? அவைகளின் ஓட்டங்களைப்பற்றிச் சொல், அவைகளின் ப்ரகாசத்தையும் சொல் ?

**தாதா :** சூரியன், சந்திரன், போலவே மற்ற ஐந்து க்ரஹங்களும் வான வட்டத்தில் நட்சத்திரங்களின் மேல் மேற்கிலிருந்து கிழக்காக ஊர்ந்து வருவதைப் பார்த்திருக்கிறேன். வானத்தில் 7 க்ரஹங்கள் தெரிகிறது. இவைகளைக் கொண்டு 7 கிழமைகளை அவைகளின் பெயர்களாலேயே சொல்லுகிறோம். பள்ளிக்கூடத்தில் யுரென்ஸ், நெப்ட்யூன் என்ற இரண்டு க்ரஹங்களைச் சேர்த்துச் சொல்லுகிறார்கள். உபாத்தியாயர்கள் நவக்ரஹங்களையோ நட்சத்திரங்களையோ எங்களுக்குக் காண்பித்ததில்லை என்றாள். தாதா, நவக்ரஹங்களின் ப்ரகாசத்தைச் சொல்லுகிறேன். 1. சூரியன், சந்திரன் இரண்டு க்ரஹங்களையும் நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். சூரியன் வான வீதியில் தனியாகக் காணப்படுகிறது. சூரியன் நட்சத்திரங்களோடு காணப்படுவதில்லை. சில சமயங்களில்

சூரியன், சந்திரன் இரண்டும் வான வீதியில் தெரிகிறது. அப்பொழுது சந்திரனுக்கு ப்ரகாசம் கிடையாது. 2. சந்திரன் வானவீதியில் நட்சத்திரங்களோடு காணப்படுகிறது. சந்திரனும், சூரியனும் மேற்கிலிருந்து கிழக்கே இருக்கும் நட்சத்திரங்களில் ஊர்ந்து வருவதை கவனிப்பதில்லை. 3. செவ்வாய் க்ரஹம் வானத்தில் சிகப்பாகக் காணப்படும். தனி நட்சத்திரம். அச்வதி நட்சத்திரம் என்பதற்கும் செவ்வாய் நட்சத்திரம்போல இருக்கும் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. க்ரஹம் என்பது ஓர் நட்சத்திரத்தை குறிக்கும். அச்வதி நட்சத்திரம் என்பது $13\frac{1}{3}^\circ \times 180^\circ =$ உள்ள வான வட்டத்தைக் குறிக்கும். 27 நட்சத்திரங்களும்கூடிய வான வட்டத்தில் $360^\circ \times 180^\circ =$ உள்ள ஆகாயத்தில் ஸப்தரிஷிக் கூட்டம், ஸப்தரிஷி மண்டலம், அகஸ்திய நட்சத்திரம், திரிசங்கு இதர நாடுகளில் சொல்லப்படும் ராக்ஷஸக் கூட்டம், மிருகக் கூட்டம், பைசாசக் கூட்டம் என்கிற நட்சத்திரக் கூட்டங்களும் அடங்கியிருக்கிறது. தாதா நீங்கள் செவ்வாய் க்ரஹம் ரேவதி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஊர்ந்து வருகிறது என்கிறீர்கள். அன்றைய தினம் ரேவதி, நான் வானத்தை ஊக்கமாகக் கவனித்தேன். செவ்வாயும், சந்திரனும், ரேவதி நட்சத்திர அடையாளமும் தெரிந்தது. ஆனால், நான் செவ்வாய் என்று நம்பவில்லை. ஒவ்வொரு நாளும் இரவில் செவ்வாய் க்ரஹத்தை க்வனித்தேன். இருபதுநாள் கழித்து அச்வதி நட்சத்திரக் கூட்டத்தில் செவ்வாய் ஊர்ந்து வந்ததைப் பார்த்தேன். 27 நட்சத்திரங்களின் அடையாளங்களையும் வானத்தைப் பார்த்துப் பார்த்து தெரிந்துகொண்டிருக்கிறேன். வெளியூர்களுக்கு இரவில் போயிருந்தாலும் வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களைக்கொண்டு கிழக்கு, மேற்கு கண்டுபிடிப்பேன். தாதா, நட்சத்திரம் தன் இடத்தை விட்டு நகராது என்று சொல்லுகிறாய். செவ்வாய் க்ரஹம் நட்சத்திரம் அல்ல என்றும் அது ஊர்வதால் க்ரஹம் என்றும் தெரிந்து கொண்டேன். 4. தாதா, புதன் ரொம்பச் சின்ன க்ரஹம் ப்ரகாசம் ரொம்பவும் குறைவு. அதை வானவீதியில் பார்க்க ரொம்பவும் கஷ்டப்பட்டேன். உன்னைக் கேட்டால் அது தெரியாது என்று சொன்னாய். நான் உன்னை அடிக்கடி புதன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறது. எந்த பாதம் என்று அடிக்கடி கேட்டு அதை வானவீதியில் பார்த்துவிட்டேன். புதன் சூரியனுக்கு சமீபமாகவே

இருக்கிறது. சூரியனுக்கு 20°டிகிரி முந்தியாவது பிந்தியாவது இருக்கிறது. புதனும் சூரியனும் அடிக்கடி சேர்ந்தும் இருக்கும். புதனை வான வீதியில் பார்க்க வேண்டுமானால் சூரியாஸ்தமன மானதும் 170°வது டிகிரியிலாவது, அல்லது சூரியோதயத்திற்கு முந்தி 10°வது டிகிரியிலாவது, புதன் ப்ரகாசத்தோடு காணப்படும் என்றாள். 5. குரு வான வீதியில் நல்ல ப்ரகாசமுள்ளது. இரவில் தலைக்கு நேராகக் காணப்படும்போது ப்ரகாசம் ஜாஸ்தி. குரு மேற்கிலிருந்து கிழக்கே யிருக்கும் ராசியில் ஊர்ந்து வருவதை பார்ப்பது கொஞ்சம் கஷ்டம். குரு ராசியில் மெதுவாக ஊர்ந்து செல்கிறது. குரு கிழக்கே நகர்வதை ஒரு மாதம் கவனிப்பதற்குள் ராசி மண்டலத்தோடு குருவை மேற்கே இழுத்துக்கொண்டு போவதே காணப்படுகிறது. 6. சுக்கிரன் அல்லது வெள்ளி, தாதா உன்னை வெள்ளி மேற்கில் முளைத்து விட்டதா என்று கேட்பதைக் கேட்டிருக்கிறேன். நீ அதற்கு வெள்ளி மேற்கில் முளைத்து விட்டது என்றும் சில சமயம் வெள்ளி கிழக்கேதான் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறாய். சுக்கிரன், சூரியனுக்கு 30°டிகிரி முந்தியும் பிந்தியுமாகத்தான் இருக்கிறது. சுக்கிரன் தான் முதல் ப்ரகாசமான நட்சத்திரம். சந்திரன் வானத்தில் இல்லாதபொழுது சுக்கிரன் இருந்தால் தாதா! நிழல் விழுவதையும் பார்த்திருக்கிறேன். 7. சனி க்ரஹம் ரொம்பவும் மெதுவாக ஊர்ந்து வருகிறது. இது மேற்கிலிருந்து கிழக்கே நகர்வதும், கிழக்கிலிருந்து மேற்கே நகர்வதும் வானத்தில் பார்ப்பதற்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. தலைக்கு நேராக வரும்போது செவ்வாய், சனி இரண்டும் ஒரே ப்ரகாசமாக இருக்கிறது என்றாள்.

**லீலாவதி :** தலைக்கு நேராக வரும் க்ரஹங்கள் எது? சூரியன் சமீபமாக உள்ள க்ரஹங்கள் எது?

**தாதா :** தலைக்கு நேராக ஒவ்வொரு நாளும் 27 நட்சத்திரங்களும் 12 ராசிகளும் நவக்ரஹங்களும் வருகிறது. சூரியன் சமீபமாக புதனும், சுக்கிரனும் இருக்கிறது. புதனும், சுக்கிரனும் தலைக்கு நேராக ப்ரகாசத்தோடு தெரியாது. செவ்வாய், குரு, சனி தலைக்கு நேராக இரவில் வரும்போது தெரியும் என்றாள்.

**லீலாவதி :** மாதப் பிறப்பு, வருஷப் பிறப்பு இவைகளை வானத்தில் பார்க்க முடியுமா?

**தாதா** : வானத்தில் பார்த்தால் தெரியாது. வானத்தில் க்ரஹங்கள் சேர்க்கை நட்சத்திரச் சேர்க்கை இவைகளாலேயே மாதப் பிறப்பு, வருஷப் பிறப்புச் சொல்லுகிறோம். சூரியன், சந்திரன் சேர்வதை வானத்தில் பார்க்க முடிகிறதா? முடியவில்லை. இருந்தாலும் அமாவாசை என்கிறோம். சூரியன் அச்வதி நட்சத்திரத்தை தொடுவது தெரிகிறதா? இல்லை. அப்பொழுது வருஷப் பிறப்பு என்கிறோம் இவைகள் வானத்தில் ஏற்படுவதால் வான விசேஷம்தான் என்றாள்.

**லீலாவதி** ; ப்ரபவாவிலிருந்து அக்ஷயவரை 60 வருஷங்கள் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? அதை எப்படி வானத்தில் கவனிப்பது ?

**தாதா** . 60 வருஷங்களின் பெயர்களும் ஞாபகம் இருக்கிறது. மேல் நாட்டார்கள் வருஷங்களுக்குப் பெயர்கள் சொல்லுவது கிடையாது. குரு ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றிவர 12 வருஷங்கள் ஆகிறது. சனி ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றிவர 30 வருஷங்கள் ஆகிறது. குருவும், சனியும், அச்வதி நட்சத்திரத்தில் காணப்படும் போது ப்ரபவ வருஷம் என்றாள். $\frac{60}{12}=5$. $\frac{60}{30}=2$.

**லீலாவதி** : கலியுகம் பிறந்து எத்தனை வருஷங்கள் ஆகிறது ?

**தாதா** : கலியுகம் பிறந்து 5048 வருஷங்கள் ஆகிவிட்டது. $\frac{5048}{60}=84$ தடவை குருவும், சனியும் அச்வதியில் காணப்பட்டிருக்கும். அதற்குமேல் குருவும், சனியும் வானத்தில் பிரிந்து காணப்படுகிறது. குரு எட்டாவது ராசியில் ஊர்ந்து கொண்டிருக்கிறது. விருச்சிகத்தில் குரு இருக்கிறது. சனி ஒரு ராசியில் $2\frac{1}{2}$ வருஷம் ஊர்ந்து வருகிறது. மூன்று ராசிகளில் ஊர்ந்து நான்காவது ராசியாகிய கடகத்தில் இருக்கிறது. கலி பிறப்பிலிருந்து வானத்தில் க்ரஹங்கள் சரியாக ஓடி வருவதால் காலத்தை நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகிறது என்றாள்.

**லீலாவதி** : 5049வது வருஷத்தின் பெயர் என்ன ?

**தாதா** : ஒன்பதாவது வருஷத்தின் பெயர் யுவ என்று எண்ணுகிறோம். ஆனால் நாம் 21வது வருஷத்தின் பெயராகிய சர்வஜித்து என்பதை நாம் சொல்லுகிறோம். மத்

திய இந்தியாவில் உள்ளவர்கள் 33வது வருஷமாகிய விகாரி என்ற பெயரைச் சொல்லுகிறார்கள். வானத்தில் க்ரஹங்களால் காணப்படுவது 5049ம் வருஷம்தான் என்றாள்.

**தாதா**. நீங்கள் ஏன் வருஷங்களை கூட்டிச் சொல்ல வேண்டும். சர்வஜித்து என்பதை மாற்றி யுவ வருஷம் என்று ஏன் சொல்லக் கூடாது. வானத்தில் க்ரஹங்கள் தான் யுவ வருஷத்தை குறிக்கிறதே? என்றாள்.

**லீலாவதி**: பூமியை தெற்கிலிருந்து வடக்குவரை ஐந்து பாகமாகப் பிரித்திருக்கிறார்கள் பௌராணிகர்கள். சிலோனுக்குத் தெற்கு, முதல் பாகம். நம் தேசமாகிய தென் இந்தியா இரண்டாவது பாகம். வட இந்தியா மூன்றாவது பாகம். அதற்கு வடக்கே இரண்டு பாகமாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பாகத்திற்கும் 12 வருஷங்கள் வித்தியாசம் வரும். அவரவர்கள் வசிக்கும் தேசத்தை அனுசரித்து வருஷம் மாறும். இதை அநுஷ்டானத்தில் வைத்துக்கொள்ள வில்லை. ஸ்காந்த புராணத்தில் பரமசிவனுக்கு ஹிமாசலத்தில் கல்லியாணம் நடக்கும்போது தென் பூமி உயர்ந்து விட்டதாகவும் அகஸ்தியர் தெற்கே வந்ததும் பூமி சமபாக மானதாகவும் வருஷம் 12 வித்தியாசப்பட்டதாகவும் சொல்லுகிறார்கள். கதையை இக்காலத்தில் எவ்வளவுதூரம் ஒப்புக்கொள்ள முடியும். ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

**லீலாவதி**: கேதுவும், ராகுவும் வானத்தில் எப்படி ஊர்ந்து வருகிறது?

**தாதா**: கேதுவும், ராகுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. குருவும், சனியும், கேதுவும் சேர்ந்து அச்வதியில் காணப்படும். குரு 12 வருஷம் கேது 18 வருஷம், சனி 30 வருஷம். 12, 18, 30 இவைகள் மூன்றும் 180தாவது வருஷத்தில் அச்வதி நட்சத்திரத்தில் சேரும். கேது ஒரு ராசியில் $1\frac{1}{2}$ வருஷம் ஊர்ந்து வருகிறது. 5019வது வருஷத்தில் விருச்சிகத்தில் கேது ஊர்ந்து கொண்டிருக்கிறது. கேது; மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், என்ற அப்ர தட்சிணத்தில் ஊர்ந்து வானத்தில் காணப்படுகிறது. கேது ஒரே நிதானத்தில் ஊர்ந்து செல்லும். இதன் கணக்கைக் கண்டு பிடித்தவர்கள் க்ரஹணத்தைச் சொல்லுவார்

கள். இதன் எதிரில், 180°வது டிகிரியில் ராகு இருக்கும். அதனாலும் க்ரஹணம் ஏற்படும் என்றாள்.

**லீலாவதி** : சூரிய க்ரஹணம், சந்திர க்ரஹணம் எப்படி ஏற்ப்படுகிறது?

**தாதா** : அமாவாசை முடியும்போது சூரிய க்ரஹணம் ஏற்படும். சந்திர க்ரஹணம் பௌர்ணமி முடியும்போது ஏற்படும். சூரிய க்ரஹணம் வான வட்டத்தில் ஏற்படுவதால் அப்பொழுது நட்சத்திரத்தையும் சேர்த்துச் சொல்லுகிறோம். சித்திரை மாதம் சூரிய க்ரஹணம் என்று வைத்துக்கொள். சித்திரை 13 தேதிக்குள் அமாவாசை வந்தால் சந்திரனும், சூரியனும், அச்வதி நட்சத்திரத்தில் சேரும். அச்வதியில் ராகுவோ, கேதுவோ இருக்கவேண்டும். பகலில் அமாவாசை முடியும்போது சூரியன் கருப்பாகக் காணப்படும். சூரியன் ப்ரகாசம் குறையும். இதுதான் சூரிய க்ரஹணம். சந்திர க்ரஹணம் இரவில் பௌர்ணமி முடியும்போது வானத்தில்தெரியும். சூரியனும் கேதுவும் சேர்ந்து இருக்கும்போது சந்திரனும் ராகுவும்சேர்ந்து சித்திரை நட்சத்திரத்தில்வரும். பௌர்ணமி சந்திரன் கருத்து வானத்தில்தெரியும். "க்ரஹணகாலத்தில் விஷ மந்திரம் ஜபித்து பிறருக்கு சௌகரியம் செய்யலாம் என்று சொல்லி யிருக்கிறாய்" க்ரஹணத்திற்கு சூரியன்தான் காரணம். சந்திரனாலேயே க்ரஹணம் தெரியும். சூரியன் நட்சத்திரங்களில் 1, 2 3, 4, என்ற 4 பாதத்திலும் ஊர்ந்து வரும்போது ராகு, கேது 4, 3, 2, 1 என்ற 4 பாதத்திலும் ஊர்ந்துவரும். சூரியனும் ராகுவும், அல்லது கேதுவும் ஒரே பாதத்தில் ஊர்ந்து வரும்போது முழு க்ரஹணம் ஏற்படும். சூரியன் முதல்பாதத்திலும் கேதுவோ, ராகுவோ, நான்காம் பாதத்திலும் இருந்தால் கால் க்ரஹணம் ஏற்ப்படும். மேல்நாட்டார்கள் க்ரஹணத்தை சூரியன், சந்திரன், பூமி, இந்த மூன்றாலேயே சொல்லுகிறார்கள். எந்தக்ரஹணத்திலும் நட்சத்திரத்தைச் சேர்ப்பதில்லை. சூரியன் அசையாது. சூரியன் வெளிச்சம் பூமிமேல் விழுந்து பூமியின் நிழல் சந்திரன்மேல் படுவது சந்திர க்ரஹணம். "பூமியின் நிழல் சந்திரன்வரை போய்ச்சேருகிறது என்பது கவனிக்க வேண்டும்." சூரியன் ஆகர்ஷண சக்தியால் பூமி ஒரே நிலையில் சுற்றிக்கொண்டும், சூரியனை சுற்றிக்கொண்டும் வருகிறது. பூமியின் ஆகர்ஷண சக்தியால் சந்திரன் இழுக்

கப்பட்டு ஒரே நிலையில் ஊர்ந்து வருகிறது என்கிறார்கள். மேல் நாட்டார்கள் க்ரஹணத்திற்காக இப்படிச் சொல்லுகிறார்கள்.

**லீலவாதி** : ஒரு வருஷத்தில் எவ்வளவு க்ரஹணம் ஏற்படும் ?

**தாதா** : ஒரு வருஷத்தில் நான்கு க்ரஹணம் ஏற்படலாம். 2 சூரிய க்ரஹணம், 2 சந்திர க்ரஹணம். ஒவ்வொரு வருஷத்திலும் ராகுவினிடமும், கேதுவிடமும் சூரியன் ஊர்ந்து செல்லுகிறது. ராகு, கேதுயிருக்கும் அந்த ராசியில் அந்த மாதத்தில்தான் க்ரஹணம் வரும். ஒவ்வொரு மாதத்திலும் சந்திரன், ராகு, கேதுவினிடம் வரும்போது க்ரஹணம் ஏற்படவில்லை என்றாள்.

**லீலாவதி** : நட்சத்திரங்களின்மேல் சந்திரன் தெற்கிலும் வடக்கிலும் ஊர்ந்து வருவதை கவனித்திருக்கிறாயா ?

**தாதா** : மார்கழி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் மூன்றாம் பிறைச் சந்திரனைப் பார்த்தேன். வானத்தில் தென் மேற்குக் கோடியில் காணப்பட்டது. தினம் இரவு 8-மணிக்கு அந்த பக்ஷம் பூராவும் கவனித்தேன். சந்திரன் தினம் 12°டிகிரி மேற்கிலிருந்து வட கிழக்காக நகர்ந்து வருவதைப் பார்த்தேன். அந்த பக்ஷம் முடியும்போது பௌர்ணமி அல்லவா ? அன்றைய தினம் சந்திரன் வட கிழக்கில் உதித்தது. ஆனி மாதத்தில் மூன்றாம் பிறைச் சந்திரனை வான வீதியில் பார்த்தேன். வட மேற்கில் சந்திரன் காணப்பட்டது. அதே பக்ஷத்தில் ஒவ்வொரு நாளும் 8-மணிக்கு இரவில் சந்திரனைப் பார்த்து வந்தேன். பதினைந்தாவது தினத்தில் சந்திரன் தென் கிழக்கில் உதித்தது. இதிலிருந்து நட்சத்திர வீதியை வானத்தில் தெரிந்துகொண்டேன். மற்ற க்ரஹங்களும் நட்சத்திர வீதியில் ஊர்வதை தெரிந்துகொண்டேன் என்றாள்.

**லீலாவதி** : சூரியனை நட்சத்திர வீதியில் கவனித்திருக்கிறாயா ?

**தாதா** : சூரியனும் நட்சத்திர வீதியில்தான் ஓடி வருகிறது. மார்கழி மாதம் 30ம் தேதி சூரியன் அஸ்தமிக்கும்போது தென் மேற்கில் அஸ்தமிக்கிறது. ஆனிமாதம் 30ம் தேதி சூரியன் உதிக்கும்போது வட கிழக்கில்

உதிக்கிறது. வட கிழக்கும், தென் மேற்கும் 180°டிகிரிக்கு மேலாகிறது. 187°டிகிரி ஆகிறது. 187 நாளில் தினம் 1°டிகிரியாக சூரியன் மேற்கிலிருந்து கிழக்கே நகர்ந்து வரும்போது நட்சத்திரவீதி தெற்கு, வடக்காக இருப்பது ஊஹிக்கப்பட்டது. தைமாதம் முதல் தேதியிலிருந்து சூரியன் வடக்காக நகர்வதை உத்திராயணம் என்கிறோம். ஆடிமாதம் முதல் தேதியிலிருந்து சூரியன் தெற்கே நகர்வதை தக்ஷிணாயணம் என்கிறோம். மேல் நாட்டார்கள் நட்சத்திர வீதியை ஒப்புக் கொள்ளாமல் பூமி சாய்ந்தும், நிமிர்ந்தும், சாய்ந்தும் சுற்றுகிறது என்கிறார்கள்.

லீலாவதி : பூமி எதற்காக சாய்ந்தும், நிமிர்ந்தும் சாய்ந்தும் சுற்றவேண்டும் ?

தாதா : பூமி எப்பொழுதும் 23½°டிகிரி சாய்ந்து நிற்கிறது. சூரியன் அசையாமல் நிற்கிறது. பூமி சுற்றும்போது சூரியன் வடக்காகவும், தெற்காகவும் காணப்படுகிறது. இதற்குக் காரணம் பூமி சாய்ந்தும், நிமிர்ந்தும் சுற்றுகிறது என்கிறார்கள். நட்சத்திர பலனும் நட்சத்திர வீதியும் அவர்களுக்குக் கிடையாது. 1, பூமி உருண்டை என்று கண்டுபிடித்தார்கள். இது சரி. 2. பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டால்தான் இரவும் பகலும் உண்டாகும் என்கிறார்கள். நம் தேசத்தவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். காரணம் சொல்லவில்லை. 3. பூமி எப்போதும் 23½°டிகிரி சாய்ந்து அச்சில் சுற்றுகிறது என்கிறார்கள். "பூமி பம்பரம்போல் சுற்றுகிறது என்கிறார்கள். சுற்ற வைத்தவர் யார் ? 4. உத்திராயண, தட்சிணயணத்திற்காக பூமி சாய்ந்தும், நிமிர்ந்தும் சுற்றுகிறது என்கிறார்கள்: பம்பரம் சுற்றுவதுபோல் பூமியையும் சுற்றுகிறது, என்று நினைத்தால் பம்பரம் விழுவதுபோல் பூமி விழுந்துவிடும் என்று எண்ண இடம் உண்டு. இரவு பகல் பூமியில் ஏற்படாது. 5. க்ரஹணத்திற்காக பூமியைச் சந்திரன் சுற்றுகிறது என்கிறார்கள். நமது தேசத்தில் க்ரஹணத்தை அநேக ஆயிர வருஷங்களாகச் சொல்லி வருகிறோம். இருந்தபோதிலும் பள்ளிக்கூடங்களில் க்ரஹணங்களைப் பற்றிச் சொல்லிக்கொடுக்கும்போது சூரியன் ப்ரகாசம் பூமிமேல் விழுவதாயும், பூமியின் நிழல், சந்திரன்மேல் விழுவதாயும் அதுவே க்ரஹணம் என்று மேல்நாட்டை அநுசரித்துச் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

லீலாவதி : பூமி உருண்டைதானா ?

தாதா : பூமி கிழக்கு மேற்கில் உருண்டையாகத்தான் இருக்கிறது. தெற்கு, வடக்கில் சொல்ல முடியாது. பூமியில் கிழக்கு மேற்கில் ஈக்வேட்டர் கோடு போடப்பட்டிருக்கிறது. மைல்களும் குறிக்கப்பட்டிருக்கிறது. தெற்கு வடக்கில் கோடுகள் சேர்க்கப்படவில்லை. ஆகாய விமானமோ, கப்பலோ போக முடியவில்லை. உஷ்ணமே இல்லாத இடம். பந்துபோல பூமி என்பது சந்தேகம்.

லீலாவதி : பூமி சுற்றுகிறது என்பதை எப்படி ஆக்ஷேபிக்கிறார்கள் ?

தாதா : பூமி 1 மணிக்கு 1000 மைல் வேகம் சுற்ற வேண்டும். பூமிமேல் காணப்படும் மேகம் பூமியை தொட்டுக்கொள்ள வில்லை. 1 மணி மழை பெய்தால் 1000 மைல்கள் கிழக்கு மேற்கில் மழை பெய்யவில்லை என்பது ஆக்ஷேபனை. பக்ஷிகளும் 1 மணி வானத்தில் பறந்து பூமியில் இறங்கும்போது 1000 மைல்கள் அவைகள் மேற்கே இறங்க வேண்டும் என்பது ஆக்ஷேபனை. ஆகாய விமானமும் 1 மணி ஆகாயத்தில் பறந்தால் 1000 மைல்கள் மேற்கே இறங்கவேண்டும் என்பது ஆக்ஷேபனை.

லீலாவதி : பூமி சூரியனைச் சுற்றுவதால் வருஷத்தைக் கண்டு பிடித்தார்களா ?

தாதா : பூமி சுற்றுவது என்பது 2 0 வருஷங்களுக்கு முந்தி கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு வருஷத்திற்கு 365 நாள்களும் 6 மணியும் என்பது, 1948 வருஷங்களாகச் சொல்லப்பட்டு வருகிறது என்றாள்.

லீலாவதி : ஆகர்ஷண சக்தி என்பதை எவ்வளவு தூரம் உபயோகப்படுத்துவது ?

தாதா : " பூமி ஓடும்போது மேகமண்டலம்வரை எல்லா வஸ்துக்களையும் ஆகர்ஷித்துக்கொண்டு ஓடுகிறது. சந்திரனையும் பூமி ஆகர்ஷித்து ஓடுகிறது. சூரியன் பூமியை ஆகர்ஷித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். ஒரு சக்தியால் ஜகத் வியாபாரங்கள் என்று நீ சொல்லுகிறாய். ஆகர்ஷண சக்தியால் என்று கண்டுபிடிக்கிறார்கள்."

**லீலாவதி :** எந்த நட்சத்திரம் வடக்கு, எந்த நட்சத்திரம் தெற்கு ?

**தாதா :** திருவாதிரை வடக்கு எல்லை நட்சத்திரம். பூராடம் தெற்கு எல்லை நட்சத்திரம். திருவாதிரையில் சந்திரன் ஊர்ந்து வரும்போது சமூத்ர மட்டத்தில் பார்த்தால் வட கிழக்கே உதயம் தெரிகிறது. மறுநாள் புனர் பூசத்தில் சந்திரன் தெற்கே நகர்வது தெரிகிறது. பூராட நட்சத்திரத்தில் சந்திரன் உதயமாகும்போது சமூத்ர மட்டத்தில் பார்த்தால் தென் கிழக்கே தெரிகிறது. மறுநாள் உத்திராடத்தில் சந்திரன் வடக்கே நகர்வது தெரிகிறது. சூரியனும் இப்படியே தெரிகிறது. மற்ற க்ரஹங்களும் எல்லை நட்சத்திரங்களில் வரும்போது வடக்கும், தெற்குமாகத் தெரிகிறது என்றாள்.

**லீலாவதி :** சூரிய உதயத்திற்கும், அஸ்தமனத்திற்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன ?

**தாதா :** சூரியன் உதித்த இடத்திற்கு அஸ்தமனம் தெற்கே நகர்ந்து இருக்கிறது. இதனால் தென் பிரதேசங்களில் உஷ்ணம் ஜாஸ்தியாயும் வட தேசங்களில் பனி ஜாஸ்தியாயும் இருக்கிறது. சூரிய உதயத்திற்கு அஸ்தமனம் $23\frac{1}{2}$°டிகிரி தெற்கே இருக்கிறது. இதை மேல் நாட்டார்கள் பூமி அச்சில் $23\frac{1}{2}$°டிகிரி சாய்ந்து நிற்கிறது என்கிறார்கள். பூமி சாய்ந்து இருப்பது என்பதற்கு நட்சத்திர வீதியில் சூரியன் அஸ்தமிப்பதே காரணம் என்றாள்.

**லீலாவதி :** வானத்தில் உன் நட்சத்திரத்தைப் பார்த்திருக்கிறாயா ?

**தாதா :** என் நட்சத்திரம் சித்திரை, இரண்டாம் பாதம் கன்யாராசி சந்திரன் சித்திரையில் ஊர்ந்து வரும்போதெல்லாம் வானத்தில் பார்த்திருக்கிறேன். என் ஜனன மாதம் புரட்டாசி, ஒரு தடவை புரட்டாசி மாதம் 15ம் தேதி ஜன்ம நட்சத்திரம் வந்தது. அடுத்த வருஷம் புரட்டாசி மாதம் 5-ம் தேதி ஜன்ம நட்சத்திரம் வந்தது. உனக்குத் தாதா ஷஷ்ட்யப்த பூர்த்தி செய்து கொண்டாயே! நட்சத்திரம் தான் முக்கியமா? வருஷம், மாதம், தேதிதான் முக்கியமா ? என்றாள்.

**லீலாவதி** : எனக்கு மக நட்சத்திரம். நான் பிறந்த பிரபவ வருஷம் வைகாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய தினத்தில் ஷஷ்ட்யப்த பூர்த்தி செய்து கொண்டேன். நீ கேட்பது என்ன என்பது எனக்குத் தெரிகிறது. 355 நாட் கொண்டது சாந்திரமானம். இப்படி கணக்குப பார்த் தால் 600 நாட்கள் குறைந்துவிடும். இதைச் சாந்திரமான ரீதியிலும் ஒப்புக்கொள்வதில்லை. ஸௌரமானத்திற்கும் சாந்திரமானத்திற்கும் மாதம்தான் வித்தியாசம் வரும், வருஷம் வித்தியாசப்படாது ; வருஷத்தின் பெயரும் மாறாது என்றாள்.

**நாதா** : சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் ஏன் ஒரே வேகமாக ஓடவில்லை? மற்ற க்ரஹங்கள் எல்லாம் ஒரே வேகத்தில் ஓடுகிறது. சந்திரன் வேகம் மாத்திரம் கண்டுபிடிக்க முடியவில்லையே? என்றாள்.

**லீலாவதி** : சந்திரன்தான் ப்ராணன். அதன் வேகத் தைக் கண்டு பிடிக்கிறவர்கள்தான் பஞ்சாங்கம் கணித்து வருகிறார்கள். அதுவும் கணக்காலேயேதான் கண்டுபிடிக் கப்படுகிறது. 55 நாழிகையிலிருந்து 65 நாழிகைவரை நட்சத்திரத்தில் 14 நாட்கள் சந்திரன் ஏறும். 65 நாழிகையி லிருந்து 55 நாழிகை வரை 14 நாட்கள் சந்திரன் குறையும். இதன் கணக்குகளை நன்றாகத் தெரிந்தவர்களையே ஜோசி யர் என்கிறோம் என்றாள்.

**லீலாவதி** : சந்திரன் வேகமாக ஓடுவதையும், மெது வாக ஓடுவதையும் எப்படி கவனித்தாய்?

**நாதா** : கார்த்திகை நட்சத்திரம் இரவு 8-மணிக்கு ஆரம்பமாயிற்று. வானத்தில் சந்திரனை கார்த்திகை கூட் டத்தோடு கவனித்தேன். மறுநாள் இரவு 10-மணிவரை கார்த்திகை என்று பஞ்சாங்கத்தில் போட்டிருந்தது. வானத்தில் சந்திரனைப் பார்த்தேன். 10-மணிக்குமேல் ரோஹிணிக் கூட்டத்தில் சந்திரன் ஊர்ந்தது. கார்த்திகை நட்சத்திர நீளம் தெரிந்துகொண்டேன். இதே கார்த்திகை யில் மறு வருஷத்தில் சந்திரன் இரவு 6-மணிக்கு வந்தது. மறுநாள் இரவு 6-மணிக்கு ரோஹிணியில் ஊர்ந்தது. இதனால் ஒரே நட்சத்திரத்தில் சந்திரன் வேகமாகவும் மெது வாகவும் ஊர்ந்து செல்லும் என்று தெரிந்து கொண்டேன். நட்சத்திர நீளம் ஒன்றுதான். "மேல் நாட்டார்கள்

இதற்கு சில சமயம் பூமி சந்திரனை வேகமாகவும் மெதுவாக வும் இழுக்கலாம் என்றுதான் சொல்லவேண்டும்" இதன் காரணத்தைச் சொல் என்றாள்.

**லீலாவதி** : நட்சத்திரம் ஒன்று 800 சுவாஸ நீளம். ஒரு மனிதன் தினம் 21,600 சுவாஸங்கள் விடுகிறான். சில வேகமாகவும் மெதுவாகவும் விடப்படுகிறது. சுவாஸம் பலத்தை குறிக்கிறது. வானத்திலும் சந்திரனால் சுவாஸம் காட்டப்படுகிறது.

**லீலாவதி** : வானத்தை சுவாஸ நீளத்தில் பிரித்துச் சொல்? சந்திரன் பலத்தையும் சொல்?

**தாதா** : வான வட்டத்தில் 12 ராசிகள், 27 நட்சத்திரங் கள், 108 பாதங்கள், 3,600 விநாடிகள், 21,600 சுவாஸங் கள் என்பது பிரிக்கப்படுகிறது. சந்திரன் எந்த நட்சத் திரத்தில் இருந்தாலும் அண்டத்தின் தற்கால நிலையைச் சொல்லலாம். அண்டத்தின் சர்வ சுவாஸங்களும் சந்திர னால் ஒன்றாக்கப்படுகிறது என்றாள்.

**லீலாவதி** : சுவாஸத்தின் ஆராய்ச்சியைச் சொல்?

**தாதா** : ஒரு மனிதன் 21,600 சுவாஸங்கள் விட்டால். 1 நாளாகிறது என்று சொல்லியிருக்கிறாய். சூரியன் ஒரு நாழிகையில் ஒரு சுவாஸ நீளம் வான வட்டத்தில் செல்லு கிறது. ஒரு நாளில் அதாவது 60 நாழிகையில் 60 சுவாஸ நீளம் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. ஒரு வருஷத்தில் 360 நாளில் 21,600 சுவாஸமுள்ள 27 நட்சத் திரங்களிலும் சூரியன் ஊர்ந்து வருகிறது. ஒரு நாளை ஒரு சுவாஸமாக எண்ணும்போது நா. 360 × வ. 60 = 21600 நாட்கள். 60 வருஷமாக உள்ள ஒரு நாளைக் குறிக்கிறது என்றாள்.

**லீலாவதி** : ஒரு சுவாஸத்தில் ஒவ்வொரு மனிதனும் தனக்கு எவ்வளவு சுவாஸ நீளம் ரத்த ஓட்டத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறான்?

**தாதா** : உத்திராயணம் என்பது உள்ளே இழுக்கப் படும் சுவாஸத்தின் ½ பாகம். தட்சிணாயணம் வெளியே வரும் ½ சுவாஸம் என்று சொல்லியிருக்கிறாய்? உத்திராய

ணத்திற்கு 187 நாட்கள். தட்சிணயத்திற்கு 178 நாட்கள். $\frac{360}{9}=\frac{1}{40}$ சுவாஸ நீளம் சரீர ரக்ஷத்திற்காகத் தங்குகிறது. சரீர ரத்த ஓட்டமும் ரத்தத்தில் மிதக்கும் நவக்ரஹ அணுக்களும் $\frac{1}{40}$ சுவாஸத்தையே நம்பி வாழ்கிறது என்றாள்.

லீலாவதி : உன் நட்சத்திரத்தில் நவக்ரஹங்கள் வருங் காலத்தில் வானத்தை கவனித்திருக்கிறாயா ?

தாதா : என் நட்சத்திரத்தில் எந்த க்ரஹம் வந்தாலும் வானத்தில் பார்த்து தெரிந்துகொள்வேன். பிறகு அந்த க்ரஹங்களை உத்தேசித்து கோவிலுக்குப் போய் நவக்ரஹத்தையும் ப்ரதட்சிணம் செய்து வருகிறேன் என்றாள்.

லீலாவதி : கலியுக ஆரம்பத்தை எப்படி வர்ணிக்கிறாய் ?

தாதா : ஆரம்பத்தை முதல் சுவாஸத்தில் ஆரம்பிக்கிறேன். அச்வதி முதல் பாதம் 200 சுவாஸ நீளம். முதல் சுவாஸத்தில் கேது யிருந்தது. பிறகு ரேவதி 4ம் பாதத்தில் ஊர்ந்தது. முதல் சுவாஸத்தில் அச்வதி முதல் பாதத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி இவைகள் இருந்து ஊர்ந்தது. ராகு சித்திரை 400வது சுவாஸத்தில் இருந்தது. இதுவே யுக ஆரம்பத்தின் வர்ணனை. விதை முளைக்கும்போது மேல் தோல் நழுவுகிறது. அதன் பிறகு தலை நிமிர்ந்து இலைவிட்டு கிளை உண்டாகி புஷ்ப்பித்து, காய்த்து பழுக்கிறதல்லவா ? இப்படியே கேது தோலாகவும், ராகு வேராகவும், மற்றக் க்ரஹங்கள் செடியாகவும், யுக ஆரம்பத்தை வர்ணிக்கிறேன். வித்திலிருந்து மரம்போல் யுகம் என்றாள்.

லீலாவதி : 8 க்ரஹங்களும், கலி 5040-தாவது வருஷத்தில் அச்வதி நட்சத்திரத்தில் சேர்ந்து காணப்பட்டதா ?

தாதா : 8 க்ரஹங்களும் அச்வதியில்தான் சேரவேண்டும். ஆனால் ஒரே நாளில் 8 க்ரஹங்களும் சேரவில்லை. ஒரே நாளில் சேர்ந்தால் அண்டம் வெடித்துவிடும். அல்லது சுத்த ஜல ப்ரளயமாக ஆகிவிடும் அல்லது சுத்த சூன்யமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறாய். இதற்கு வாக்கியமும் சொல்லியிருக்கிறாய் என்றாள்.

லீலாவதி : க்ரஹங்களின் வேகத்தைச் சொல்?

தாதா : சந்திரன் 360°டிகிரியுள்ள 27 நட்சத்திரங்களில் 27 நாள் 8-மணியில் ஓடிவருகிறது. செவ்வாய் 1 வருஷம் 8 மாதத்தில் ஓடி வருகிறது. புதன் ஒரு வருஷத்தில் ஓடி வருகிறது. வியாழன் 12 வருஷத்தில் ஓடி வருகிறது. வெள்ளி ஒரு வருஷத்தில் ஓடி வருகிறது. சனி 30 வருஷத்தில் ஓடி வருகிறது. ராகு, கேது 18 வருஷத்தில் ஓடி வருகிறது.

லீலாவதி ; நேராக ஓடிவரும் க்ரஹங்களைச் சொல்?

தாதா : சந்திரனும், சூரியனும் நிற்காமல் நேராக ஓடி வருகிறது.

லீலாவதி : அப்ர தட்சிணமாக ஓடிவரும் க்ரஹங்களைச் சொல் ?

தாதா : ராகுவும், கேதுவும் எதிராகவும் நிற்காமலும் ஊர்ந்து வருகிறது.

லீலாவதி : வக்ரமாக ஓடிவரும் க்ரஹங்களைச் சொல் ?

தாதா : செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி இவைகள் வக்ரித்து வருகிறது.

லீலாவதி : வக்ரகதி வானத்தில் எப்படித் தெரிகிறது ?

தாதா : நான் அடிக்கடி க்ரஹங்களை வானத்தில் பார்த்ததில் சுக்கிரனைக் கொண்டும், புதனைக் கொண்டும் வக்ரகதியைத் தெரிந்து கொண்டேன். சூரியனுக்கு முந்தியும் பிந்தியும் புதனும், சுக்ரனும் தெரிகிறது. சூரியன் தினம் 1°டிகிரி வேகம், புதன் 1°டிகிரி வேகம், சுக்கிரன் 1°டிகிரி வேகம். இதனால் புதனும், சுக்கிரனும் வானத்தில் தெரியக் கூடாது. சுக்கிரோதயத்தை கிழக்கிலும், மேற்கிலும் பார்க்கிறோம். புதனும் இதேமாதிரிதான் தெரிகிறது. சந்திரனைப்போல வேகமாகவும், மெதுவாகவும் ஓடுகிறது என்பதும் இல்லை. சுக்கிரன் அனுஷத்தில் 1, 2, 3, 4 என்ற பாதத்தில் ஓடுகிறது. பிறகு அனுஷம் 4, 3 என்ற பாதங்களில் திரும்பி வந்து விடுகிறது. புதனும் இப்படியே காணப்படுகிறது இதை வக்ரகதி என்கிறோம்.

லீலாவதி : வக்ரகதி ஏற்படுவதின் காரணம் என்ன ?

நாதா : வக்ரகதியை அண்டத்தை ஒரே புருஷனுக நினைத்து புருஷனுக்கு சரீரத்தில் பித்தம், வாதம், கபம், சிலேஷ்மம் ஒவ்வொரு நாளும் ஒரேமாதிரியா யிருந்தாலும் ஏதாவது சரீர கோளாறினுல் கபமோ, பித்தமோ ஏறு வதுபோல வக்ரகதிக்குக் காரணம் என்று சொல்லியிருக் கிருய். மேல் நாட்டார்கள் ராசி வீதியில் வக்கரமாகத் தெரியும் க்ரஹங்களை "மூலையில்" என்று ஒரு காரணம் சொல்லுகிருர்கள்.

லீலாவதி : வக்ரகதி உள்ள ஐந்து க்ரஹங்களும் எவ்வ ளவு நாள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஊர்ந்து வரு கிறது ? வக்ரகதியில் எவ்வளவு நாள் கிழக்கிலிருந்து மேற்கே ஊர்ந்து செல்கிறது ?

நாதா : செவ்வாய் 760 நாட்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வருகிறது. வக்ரகாலத்தில 61 நாட்கள் கிழக்கி லிருந்து மேற்கே செல்கிறது. புதன் 120 நாட்கள் மேற்கி லிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. வக்ர காலத்தில் 21 நாட்கள் கிழக்கிலிருந்து மேற்கே செல்லுகிறது. குரு 400 நாட்கள் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. வக்ரத்தில் 121 நாட்கள் கிழக்கிலிருந்து மேற்கே செல்கிறது. சுக்கிரன் 580 நாட்கள் மேற்கிலிருந்து கிழக்கே ஓடி வரு கிறது. 53 நாட்கள் கிழக்கிலிருந்து மேற்கே செல்லுகிறது. சனி 377 நாட்கள் மேற்கிலிருந்து கிழக்கே ஊர்ந்து வருகிறது. வக்ர காலத்தில் 128 நாட்கள் கிழக்கிலிருந்து மேற்கே செல்கிறது என்ருள்.

லீலாவதி : காலத்தை எப்படி அளப்பது ?

நாதா : காலத்தை ஜலத்தாலேயே அளந்ததாகச் சொல்லியிருக்கிருய். ஒரு சட்டியில் ஆணியால் துவாரம் செய்யவேண்டும். அண்டா ஜலத்தில் துவாரமுள்ள சட்டியை மிதக்கவிட வேண்டும், துவாரத்தின் வழியாக சட்டியில் ஜலம் நிரம்பிவிடும். ஜலம் நிறம்பும் காலம் நாழி எனப்படும். இப்பொழுதும் சட்டியை நாழி என்கி ரேம். நாழிகையைக் குறிப்பதால் நாழி என்று சட்டிக் குப் பெயர் வந்தது.

லீலாவதி : கால ஜலத்தின் விசேஷம் என்ன ?

**தாதா :** கால ஜலம் அல்லது நதி எனப்படும். நதி என்றால் அதில் சின்னமீன், பெரிய மீன், மீன் முட்டைகள், முதலைகள் எல்லாம் இருக்கும் என்றாள்.

**லீலாவதி :** வானத்தில் கால நதியை எப்படி வர்ணிப்பாய் ?

**தாதா :** காலம் நதிபோல் கிழக்கிலிருந்து மேற்கே ஓடுகிறது. சூரியன் கால நதியில் திமிங்கலம்போல எதிர்த்து ஓடுகிறது. சந்திரன் ஓடம்போல எதிர்த்து ஓடுகிறது. வக்ர க்ரஹங்கள் பெரிய மீன் விசேஷங்கள்போல எதிர்த்து நீந்துகிறது. எதிர்த்து நீந்துவதால் சிரமம் ஏற்படுகிறது. சிரமத்திற்க்காக நிற்கிறது. அந்த சமயத்தில் நதியால் இழுத்துப்போவது போல வக்ரகதி ஏற்படுகிறது. ச்ரமம் தணிந்து மறுபடியும் நீந்துவதுபோல வக்ர காலத்திற்குப் பிறகு க்ரஹங்கள் காணப்படுகிறது. இதுவே காலநதியின் வர்ணனை என்றாள்,

**லீலாவதி :** சந்திரனை ஓடம் என்று வர்ணித்தது பொருத்தமா ? ஜல ஜந்துவாகவே சொல்லேன் ?

**தாதா :** நட்சத்திரங்களை மீன் முட்டைகள் என்பதும் வக்ரிக்கும் க்ரஹங்கள் மீன்கள் என்பதும் சூரியனை திமிங்கலம் என்பதும்—நதியால்தானே வர்ணிக்கப்பட்டது. நதி என்றால் நாவம் இருக்கத்தான் வேண்டும் என்று சொல்லியிருக்கிறாய். நாவம் என்றால் ஓடம். ஆகாசத்தில் நதியாக பாவிக்கும் குணம் வரும்போது சந்திரனை ஓடமாகத்தான் பாவிக்கும்படி தோன்றுகிறது என்றாள்.

**லீலாவதி :** ஒரு நட்சத்திரத்தில் நாலு க்ரஹங்களைப் பார்த்திருக்கிறாயா ?

**தாதா :** மக நட்சத்திரத்தில் நான்கு க்ரஹங்களைப் பார்த்திருக்கிறேன். சிம்ம ராசியில் மக நட்சத்திரம் இருக்கிறது. ஒருநாள் விடியற்காலையில் மக நட்சத்திரத்தில் சந்திரன், சுக்கிரன், செவ்வாய், குரு, இந்த நான்கும் கிழக்கில் தெரிந்தது. சந்திரன் பூமிக்கு சமீபம் என்றும் குரு பூமிக்கு தூரம் என்பதும் வானத்தில் வித்தியாசமாகத் தெரியவில்லை. மேல் நாட்டார்கள் சில க்ரஹங்கள் பூமிக்கு சமீபம் என்றும் சில க்ரஹம் தூரத்தில் இருக்

கிறது என்று சொல்லுகிருர்கள். நாம் அப்படி நினைக்கவே யில்லே! மக நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் ஊரும் க்ரஹம் முந்தியும் இரண்டாம் பாதத்தில் ஊரும் க்ரஹம் பிந்தியும் வானத்தில் உதயமாகிறது என்ருள்.

லீலாவதி : நமக்கும் மேல் நாட்டாருக்கும் வருஷம் எண்ணுவதில் எப்படி வித்தியாசம் ?

தாதா : நாம் கலி பிறப்பிலிருந்து எண்ணுகிருேம். மேல் நாட்டார்கள் கி. பி. 1947 என்கிருர்கள். கிறிஸ்து பிறந்ததிலிருந்து என்று அர்த்தம். அதற்கு முந்தின காலத்தை எண்ணும்போது பி. ஸி. என்பார்கள். பி. ஸி. கலி 3000 வருஷம் வரைதான் ஒப்புக்கொள்ளுகிருர்கள். 5048 என்பதை குறிப்பாகச் சொல்லுகிருேம் என்ருள்.

லீலாவதி : மேல் நாட்டார்கள் வருஷ ஆரம்பத்தை எப் படி ஆரம்பிக்கிருர்கள்? நாம் யுக ஆரம்பத்திற்கு திதி, வாரம், நட்சத்திரம், க்ரஹங்கள் சேர்க்கை எல்லாவற்றை யும் சேர்த்துச் சொல்லவேண்டி யிருக்கிறதே? என்ருர்.

தாதா : ஆதியில் ரோம் நகரத்தில் வருஷத்தை கண்டு பிடித்தார்களாம். ஐரோப்பாவில் ரோம் நகரம் இருக் கிறது. நாம்கூட மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்ததாகச் சொல்லுகிருர்கள். நமது தேசத்தில் தீக்ஷிதர் களுக்கு எவ்வளவு கௌரவமோ அதேபோல ரோம் நகரத் திலும் பாதிரிகளுக்கு கௌரவம். பூமி ஓடுகிறது, சுற்று கிறது என்பது கி. பி. 1700 வருஷங்களுக்குப் பிந்தியது. பூமி ஓடுகிறது என்பதை அந்தக் காலத்துப் பாதிரிகளும் ஒப்புக் கொள்ளவில்லே. பாதிரிகளும் நட்சத்திரத்தைக் கொண்டோ, சந்திர, சூரியர்களேக் கொண்டோ வருஷ ஆரம்பத்தைச் சொல்லியிருக்கலாம். அவர்களும் நம்மைப் போலவே ஏழு கிழமைகளேச் சொல்லுகிருர்கள். ஞாயிறு, திங்கள், Sun, Moon, என்ற கிழமை தேவதைகளும், ஒன்றையே குறிக்கிறது. 12 மாதங்களுக்கும் பெயர்கள் உண்டு. 28 தேதி, 30 தேதி, 31 தேதி என்ற வித்தியாசமும் நமக்கு இருப்பதுபோல இருக்கிறது. மாதப் பிறப்பும், வருஷப் பிறப்பும் சேர்ந்து வரவில்லே. நாம் வருஷத்திற்கு 12 நிமிஷம் சேர்த்துச் சொல்லுகிருேம். மார்கழிமாத முதல் தேதியே ஜனவரியாக ஆரம்பத்தில் இருந்திருக்க

லாம். 120 வருஷத்திற்கு ஒருநாள் கூட ஆகிறது. $\frac{1947}{120} = 16\frac{27}{120}$ = இப்பொழுது மார்கழி 17ந் தேதியிலோ 18ந் தேதியிலோ ஜனவரி பிறக்கிறது. நாம் மத்திய ஆசியாவிலிருந்து வந்ததாக பால கங்காதரதிலக் என்பவர் ஒப்புக் கொள்ளுகிறூராம். வருஷ ஆரம்பத்திற்கோ யுக ஆரம்பத்திற்கோ க்ரஹங்களைக்கொண்டு சொல்லுவதே மேலாகும் என்றூள்.

**லீலாவதி :** நட்சத்திரக் கூட்டங்களுக்கு பைசாசக் கூட்டம் என்றும் சொல்லுவார்கள் என்றூயே அதைச் சொல் ?

**தாதா :** பாலைவன ப்ரதேசத்தில் இருப்பவர்களுக்கு நட்சத்திரக் கூட்டங்கள் நன்ருகத் தெரியும். பாலைவன ப்ரதேசத்தில் இருப்பவர்கள் இரவு நேரங்களில்தான் ப்ரயாணம் செய்ய முடியும். நட்சத்திரக் கூட்டங்களை அடிக்கடி பார்ப்பதால், நாம் ராசி சொல்வதுபோல, கரடி நட்சத்திரக் கூட்டம் என்றும், அறியாத சிறு பெண்ணை பிசாசு அழைக்கிறது, என்ற நட்சத்திரக் கூட்டத்தையும், தங்கள் பாஷைகளில் கதை சொல்வதற்கு ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிறூர்கள் என்றூள்.

**லீலாவதி :** ஸப்தரிஷிக் கூட்டத்தை வானத்தில் எப்படிப் பார்ப்பது ?

**தாதா :** சந்திரன், ரேவதி நட்சத்திரத்தில் ஊர்ந்து தலைக்கு நேராக வரும்போது 30°டிகிரி வடக்கில் கிழக்கு மேற்காக, ஏழு நட்சத்திரங்கள் தெரிகிறது. இதற்கு ஸப்தரிஷிக் கூட்டம் என்று பெயர். ஸப்தரிஷிக் கூட்டம் மங்கலாகவே தெரிகிறது என்றூள்.

**லீலாவதி :** ஸப்தரிஷி மண்டலம் எவ்விடத்திலிருக்கிறது ?

**தாதா :** ஸப்தரிஷி மண்டலம் மக நட்சத்திரத்திற்கு வடக்கில் காணப்படுகிறது. சிம்ம ராசியிலிருந்து விருச்சிக

ராசிவரை நீண்டு காணப்படும். இதில்தான் துருவனும் அருந்ததியும் இருக்கிறது என்று சொல்லியிருக்கிருய். ஸப்தரிஷி மண்டலம் சிம்மராசி உதிக்கும்போது வடகிழக்கில் உதயமாகிறது. துலாராசி தலைக்கு நேராக வரும்போது 30°டிகிரி வடக்கில் இருக்கிறது. விருச்சிகராசி அஸ்தமிக்கும்போது வடமேற்கில் ரிஷி மண்டலம் அஸ்தமிக்கிறது என்ருள்.

லீலாவதி : திரிசங்குக் கூட்டம் எவ்விடத்தில் இருக்கிறது ?

நாதா : திரிசங்கு நட்சத்திரம் தலைகீழாகவும் தெற்கிலும் இருக்கும் என்று சொல்லியிருக்கிருய். குறிப்பாக இடத்தைச் சொல்லவில்லை.

லீலாவதி : அகஸ்திய நட்சத்திரம் எங்கே இருக்கிறது ? அதன் உதய அஸ்தமானத்தைப்பற்றிச் சொல் ?

நாதா : அகஸ்திய நட்சத்திரம் மிதுனராசி கடைசியிலிருக்கிறது, வைகாசிமாதக் கடைசியில் அஸ்தமனம். சூரியன் மிருகசீர்ஷத்தில் சேர்ந்து வரும்போது அஸ்தமனம். இரவில் புனர்பூச நட்சத்திரம் தலைக்கு நேராக வரும்போது தெற்கில் இரண்டு நட்சத்திரங்கள் ப்ரகாசமாகத் தெரிகிறது. ஒன்று தலைக்கு நேராக "90°" டிகிரிக்கு தெற்கில் 30°வது டிகிரியிலும் மற்ருென்று 65°வது டிகிரியிலும் இருக்கிறது. தெற்கு 30°வது டிகிரியில் இருக்கும் நட்சத்திரம் 10 மணி காலம் தெரிகிறது. தெற்கு 65°வது டிகிரியில் இருப்பது 8 மணி காலம் இரவில் தெரிகிறது. திருவாதிரை நட்சத்திரவீதி 187°டிகிரி நீளம். ஹஸ்த நட்சத்திரவீதி 180°டிகிரி நீளம். பூராட நட்சத்திரவீதி 173°டிகிரி நீளம். அகஸ்திய நட்சத்திரம் பூராடவீதிக்குத் தெற்கிலிருப்பதால், நாழிகையான உதயமும் சீக்கிரமான அஸ்தமனமும் ஏற்படுகிறது என்ருள்.

லீலாவதி : நீயாகக் கண்டுபிடித்த நட்சத்திரத்தைப் பற்றி குறிப்பிடு ?

**தாதா :** 27 நட்சத்திரங்களையும் வானத்தில் ஊஹித்திருக்கிறேன். அதில் சுவாதி நட்சத்திரம் நல்ல ப்ரகாசம். ஜோதி என்று சொல்லியிருக்கிறாய், ஜோதி என்றால் தீபம். தீபம் ஏற்றி வைத்ததுபோல வானத்தில் காணப்படுகிறது. க்ரஹம்போல் ஒத்தையாகத் தெரிகிறது. சுவாதியில் சந்திரன், ஊர்ந்து வரும்போது 20°டிகிரி வடக்கில் ஜோதி தெரிகிறது என்றாள்.

**லீலாவதி :** வானத்தில் மகவோட்டத்தை கவனித்திருக்கிறாயா ?

**தாதா :** மக நட்சத்திரத்தில் ஐந்து நட்சத்திரங்கள் குறிப்பிடப்படுகிறது. இதன் மத்தியில் சந்திரன் ஊர்ந்து வரும்போது தெற்கு, வடக்கு நட்சத்திரங்களின் நடுவில், 1, 2, 3, 4 என்று, மத்தியில் சந்திரன் காணப்படும். இதுவே மக வோட்டம் என்றாள், தாதாவும், லீலாவதியும் வான வீதியைப் பேசி முடித்தார்கள்.

லீலாவதி : தாதாவின் சில குறிப்புகளை எடுத்துப் படிக்கிறாள் :

1. **அண்டம் :** நாம் வசிக்கும் பூமிக்கு அண்டம் என்று பெயர். அண்டம் என்றால் முட்டை. வாத்து முட்டை, கோழி முட்டைபோல பூமியும் உள்ளது. முட்டைக்கு உயிர் இருப்பதால் அதனுள் உள்ள 'குஞ்சு' உயிரோடுஇருக்கிறது. இந்த உபமானத்தைக்கொண்டு பூமி அண்டம் எனலாம். பூமி விஷ்ணுவின் வயிற்றுக்குள் இருக்கிறது. வயிற்றுக்குள் இருப்பதால் அண்டம் என்கிறார் சிலர். முட்டைக்குள்ளே குஞ்சு இருக்கிறது. மேலே மூடிக்கொண்டிருப்பதென்ன ? மாவு பதார்த்தம் போலும், உருண்டையாயும், மிருதுவாயும், ஓடு போலவும் மூடிக்கொண்டிருக்கிறது. உள்ளேயிருக்கும் குஞ்சுவுக்கு வேண்டியஉணவு, உஷ்ணம், வாயு அணுக்கள் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறதல்லவா ? அதே போல பூமியானது குஞ்சு போலவும், ஆகாயமானது "நட்சத்திரங்கள் நவக்ரஹங்கள் சேர்ந்து" மேல் ஓடு போலவும் அண்டமாக கருதப்படுகிறது. இந்த அண்டத்தை நாம் எப்படி நினைக்கிறோம்.

சமுத்ரமும் பூமியும் சேர்ந்து அண்டம் என்கிறோம். சமுத்ர பாகம் ஜாஸ்தி என்றும் பூமி பாகம் குறைச்சல் என்றும் நினைக்கிறோம். சமுத்ரத்தில் பூமி உண்டானதா? பூமியில் பெய்த மழையால் சமுத்ரம் உண்டானதா? என்று கவனித்தால் முடிவு கிடைக்கவில்லை. சமுத்ரத்தில் பூமி உண்டாகாது? வெறும் மண்ணில் ஜலம் எப்படி உண்டாகும். ஆகையால் அண்டம் என்பது பஞ்சபூத ஐக்யம். தாதா பூமி உண்டானதின் ஆராய்ச்சியை கவனிக்கிறார்.

2. **அண்டத்தின் அதிசயம் :** பூமியில் மலைகள் காணப் படுகிறது. நமது தேசத்தில் நெருப்பு மலை கிடையாது. சில தேசங்களில் நெருப்புமலை இருக்கிறது. எரிமலை என்று பெயர். எரிமலையிலிருந்து நெருப்புக் குழம்பு ஓடி வருகிறது. பூமிக்குள் நெருப்பு இருப்பதால் கல்லும், மணலும் குழம்பாக ஓடி வருகிறது. அண்டத்தில் பனிமலைகள் இருக்கின்றன. கங்காநதி பனிமலையிலிருந்து ஜலம் வற்றாமல் பெருகிஓடி சமுத்திரத்தில் விழுகிறது. பனிக்கி 'ஹிமம்' என்று பெயர். ஹிமயமலையில் பனிக்கட்டி பூமியிலிருந்து நெருப்புக் குழம்பு வருவதுபோல எண்ணுவதில்லை. சமுத்ர ஜலம் வற்றி மேகமாக மாறி மலையில் படிந்து, பனிக்கட்டியாக மாறி, கங்கையில் ஜலமாக ஓடிவந்து சமுத்ரத்தில் விழுகிறது என்று எண்ணுகிறோம். முதலில் சமுத்ரமா? பனிமலையா? இதுவும் பஞ்சபூத அண்டத்தில் ஓர் அதிசயம்.

3. பூமியின் மத்திய ரேகையிலிருந்து 60° டிகிரி வடக்கேயும், தெற்கேயும் பனி ஜாஸ்தி. இதுவும் ஓர் அதிசயம்.

4. பஞ்ச பூத ஐக்யம் அண்டம். 1. ஆகாயம், ஒன்றுமில்லாத இடம் ஆகாசம். ஆகாசத்தில் வாயு நிறைந்துயிருக்கிறது. ஆகாசத்தில் மேகம் ஓடுகிறது. ஒன்றும் இல்லாத ஆகாசத்தில் மேகம் ஓடுவதால் மேகத்தை காற்றுத் தள்ளுகிறது. வாயு 2. 1 ஆகாசம். 2 காற்று. 3 மேகம். மேகம் ஜலத்தோடு கூடியது. இரண்டு மேகம் ஒன்றோடொன்று இழைவதால் ப்ரகாசம் உண்டாகிறது. ப்ரகாசம், ஜ்வாலை, அக்நி. மேகத்தில் அக்நி 3 வதாக எண்ணப்படுகிறது. இடிக்குப் பிறகு மழை உண்டாகிறது. மேகம் இழைவதால் அக்நி குழம்பு பூமியில் விழுகிறது. இதற்கு அசனி

என்று பெயர். அக்நிக் குழம்பை ஜலம் என்று இவ்விடத்தில் சொல்லப்படுகிறது. 4 ஜலம். ஜலத்தில் பூமி உண்டாகிறது. பூமியின் தன்மை என்ன? உலோக வகைகளோடு கூடியது பூமி. அக்நிக் குழம்பில் உண்டானது இரும்பு. உலோகவகை. இதுவே ஜலத்தில் பூமி உண்டாயிற்று என்று ஊஹிக்கப்பட்டது.

5. வேதத்தில் அண்ட உற்பத்தி. ப்ரளயத்திலிருந்து அண்டம் உண்டாயிற்று என்கிறார்கள் வேதம்படித்தவர்கள் ப்ரளயம் என்றால் என்ன? ப்ரளயத்தை ஜலமயம் என்கிறார்கள். எங்கு பார்த்தாலும் ஜலமாக இருந்தால் செடி கொடி எல்லாம் அழுகிவிடும். கிராம்ய பசுக்களும் ஆரண்ய பசுக்களும் ஜலத்தில அமிழ்ந்துவிடும், மனிதர்களும் ப்ரளயத்தில் மூழ்கிவிடுகிறார்கள். இந்த தன்மை உள்ள ஜலத்தில் எது முதலில் காணப்படுகிறது. தாமரை இலை ஜலத்தின் மேல் முதன் முதலில் காணப்படுகிறது. தாமரை இலை மேல் அண்டம் உண்டாயிற்று? எப்படி? ஜலத்தில் தாமரை உண்டாகிறதல்லவா? தாமரைக் கொடியை அனுசரித்து ஜலத்தின் கீழே போனால் தாமரைக் கிழங்கும் மண்ணும் காணப்படுமல்லவா? அந்த மண்ணை தாமரை இலை மேல் வைத்து அண்டத்தை உண்டு பண்ணினார் ப்ரம்மா. மஹாவிஷ்ணுவின் தொப்புளில் தாமரைக்கொடி உண்டாகிஅதில் ப்ரும்மா இருப்பதை விஷ்ணு ஆலயங்களில் பார்க்கிறோமல்லவா? இதைப்போலவே அண்டத்தை வேதத்தில் கல்பனை செய்திருக்கிறது.

6.✓ சூரியனின் பின்னம் அண்டம். சூரியன் உஷ்ணத்தோடு கூடிய பெரிய அண்டம். அதிலிருந்து தெரித்து வந்த பாகமே இந்த பூமி. அனேக ஆயிர வருஷங்களுக்கு முந்தி தெரித்து வந்துவிட்டது. சில ஆயிர வருஷங்களுக்கு முந்திதான் குளிர்ந்தது. அதன் பிறகு நதிகளும் மலைகளும் சமுத்ரமும் உண்டாயிற்று என்கிறார்கள் சில மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள்.

7. கிரஹங்கள் அண்டங்கள். 1 பூமி. 2 சந்திரன். 3 செவ்வாய். 4 புதன். 5 வியாழன். 6 வெள்ளி. 7 சனி. இந்த ஏழுக்ரஹங்களும் சூரியனைச் சுற்றுகிறது. இந்த

ஸப்த க்ரஹங்களிலும் மலை, நதி, சமுத்ரம் மனிதர்கள் எல்லாம் இருக்கின்றன. பூமி க்ரஹங்கள் போல ஓடுகிறது என்று எண்ணுபவர்களும், ஏழு பூமி விசேஷம் என்று எண்ணுகிறவர்களும், 7 அண்டங்கள் என்று நினைக்கிருர்கள்.

8. நட்சத்திரங்கள் அண்டங்கள். நட்சத்திரம் ஒவ்வொன்றும் பெரிய அண்டம். இந்த பூமிக்கு அநேக மைல்கள் தூரத்திலுள்ளது. நாம் வசிக்கும் அண்டத்தில் காணப்படும் சர்வ வஸ்துக்களும் அவைகளிலும் இருக்கலாம். இப்படி சில மேல்நாட்டு விக்ஞானிகள்.

9. மூன்று லோகங்கள். பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம், மூன்றும் வேதத்தில் குறிக்கிறது. பூ லோ க ம் பூமியை குறிக்கிறது. புவர்லோகம் வாயு மண்டலத்தை குறிக்கிறது. ஸுவர்லோகம் நட்சத்திரத்தின் இருப்பிடத்தையும் நவக்ரஹங்களையும் குறிக்கிறது. பூமியை அனுசரித்தே அண்டங்கள். நட்சத்திரத்தையும் ராசியையும் நவக்ரஹத்தையும் வேதம் சொல்லுவதால் ஆகாயத்தைப் பார்த்தே வேதம் சொல்லப்பட்டது. அண்டத்தின் பெருமையே வேதம். தாதாவின் அண்டத்தின் குறிப்பு முடிந்தது.

ஆதி பாஷை: ஆதிகாலம் என்பது எது? ஆரம்பம் எவர்களாலும் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை. நமது தேசத்தில் வேத காலம்தான் ஆதிகாலம் என்கிருர்கள். ஸம்ஸ்க்ருத பாஷையில்தான் வேதம் இருக்கிறது. ஸம்ஸ்கிருத பாஷையில்தான் புராண, இதிஹாச, ஜோதிஷங்கள் இருக்கின்றன. ஜோதிஷ சாஸ்திரத்தைக்கொண்டு ஒருவாறு ஆதிகாலத்தை ஊஹிக்கலாம். அனேகம் பாஷைகளில் வேத பாஷையும் புராண பாஷையும்தான் ஆதி பாஷையாகக் கொள்ளப்படுகிறது. வேத பாஷையில் ஆராய்ச்சி ஜாஸ்தியாக இருக்கிறது. வேதம் என்பதை அனாதி என்கிருர்கள். எந்தக் காலத்தில் வேதம் சொல்லப்பட்டது. எந்த ஊரில் முதலில் வேதம் படித்தார்கள். எக் காலத்தில் வேதத்தைப் பரவச் செய்தார்கள். இந்த விஷயங்கள் தெரியாததால் அனாதியான வேதம் என்றும்

அனுதிகாலமாக இருக்கிறதென்றும் சொல்லுகிருர்கள். கங்கைக்கும் யமுனைக்கும் மத்தியிலுள்ள தேசத்தவர்களே முதன் முதலில் வேதத்தைச் சொன்னவர்களாகவும் படித்தவர்களாகவும் தெரிகிறது. ஆதிகாலம் என்பது கலியுகத்திற்கு முந்தி என்று சேர்த்துக்கொள்ளமுடியாது. கலியுக ஆரம்பமே ஆதிகாலம். கலியுக ஆரம்பத்திலிருந்து 2,500 வருஷங்களுக்குப் பிறகு புத்தர் பிறந்தார். புத்தருக்குப் பிந்திய காலத்தை இந்து தேச சரித்திர காலமாகவும் முந்தினகாலமெல்லாம் வேதகாலமாகவும் வைத்திருக்கிருர்கள். வேதகாலத்தவர்கள் அனேக யாகங்கள் நடத்தியதாகத் தெரிகிறது. வேதம் யாகத்தைத்தான் சொல்லுகிறது. யாகத்தில் ஆண் ஆட்டின் வபையை அக்நியில் ஹோமம் செய்வார்கள். புத்தர் யாகத்தை ஜீவஹிம்சை என்று தடுத்துவிட்டார். புத்தருக்கு முந்தின காலம் வேத காலம். வேத பாஷையே ஆதி பாஷை. "தாதா குறிப்பு"

இந்து தேசம் : நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்து தேசம் என்று பெயர். நமது தேசத்து முன்னோர்கள் இந்தியாவை 56 தேசங்களாகப் பிரித்திருக்கிருர்கள். இந்து தேசம் என்ற பெயர் எப்படி வந்தது? ஆதி பாஷைக்காரர்கள் சந்திரனை இந்து என்று அழைத்தார்கள். சந்திரனே அவர்களுக்கு ராஜா. ராஜாவின் பெயர் இந்து. இதன் தேசம் இந்து தேசம். சந்திரனுக்கு அமிருத : ஸோம : இந்து : என்ற பெயர்கள் காணப்படுகிறது. சந்திரனிடத்தில் அமிர்தம் இருக்கிறது. அமிர்தம் தான் தேவதைகளுக்கு ஆகாரம். அமிர்தம் பூமியிலிருந்து தான் சேர்க்கப்படுகிறது. பூமியிலிருந்து நட்சத்திரங்களில் போய்ச் சேருகிறது அமிர்தம். பூமியின் தெற்கிலோ வடக்கிலோ அமிர்தம் இழுக்கப்பட்டு ஆகாயத்தில் சேரவேண்டும். அமிர்தத்தால் நட்சத்திரம் ப்ரகாசிக்க வேண்டும். நட்சத்திரத்திலிருந்து அமிர்தம் ஒழுகி சந்திரனிடம் வருகிறது. நட்சத்திர ப்ரகாசத்திலிருந்து உதிர்ந்து சந்திர ப்ரகாசமாகிறது. இம்மாதிரியான ஊஹத்தால் "நமது அண்டமே இந்து என்ற பெயரை உடையது." மேல் நாட்டார்கள் நமது தேசத்திற்கு இந்து தேசம் என்று சொல்லுவதால் நாமும் சொல்லுகிறோம்? இந்து தேசம். ஜம்பூ த்வீபம், பரத கண்டம் எல்லாம் ஊஹிக்க வேண்டிய விஷயங்கள், "தாதாவின் குறிப்பு"

ஈச்வரன் : ஈஸ்வரன் யார் என்பதை கவனி. ஒவ்வொரு மனிதனும் தன் மனதாலேயே "அறியப்படுத்திக் கொள்வது" ஈச்வரன். மனது என்பது சரீரத்திற்குள்ளேயே யிருக்கிறது. வெளிப்படையாகச் சொல்லப்படும் ஈச்வரனை கவனி. ஈச்வரன் என்பதற்கு மூலப் பொருள் ப்ரம்மம். ப்ரம்மம் என்பது உயிரோடு கூடியது. அது வளராது. தன்னிலையில் குறையாது. பூமி வளருகிறதா? குறைகிறதா? வருஷம் நீளுகிறதா? குறைகிறதா? நட்சத்திரங்கள் புதிதாக உண்டாகிறதா? உதிர்ந்து விடுகிறதா? ஒன்றும் இல்லை. அண்டமும் அதோடு காணப்படும் தாரகங்களும் சேர்ந்து ஒரே பரப்ரம்மம். சமுத்ரமும் பூமியும்தான் ஈச்வரனுடைய மல மூத்திரம். நட்சத்திரங்கள் வயிறு பாகத்தின் மேல் தோலுக்குள்ளாகிய மயிர்க்காம்புகளின் மூலம். நவக்ரஹங்கள்தான் ரத்த ஓட்டத்தைக் குறிக்கும் நரம்பு ஸ்தானங்கள். பொதுவாக பரப்ரம்மத்திற்கு நாம் ஆகாயத்தில் பார்க்கும் நட்சத்திரங்களும், நவக்ரஹங்களும் நடுவயிறு பாகம். அண்டமாகிய பூமியில் ஜனங்கள் உண்டாவதும், பசுக்கள் உண்டாவதும் அவைகள் மிருதமாவதும் அண்ட நாயகனுடைய ஆஹாரங்கள். ஆஹாரத்திலிருந்து பலம் உண்டாகிறது. பலம்தான் சந்திரன். பலத்தையே ஆஹாரமாக வைத்துக்கொள்வது இந்திரியங்கள். இந்திரியங்களுக்கு ராஜா இந்திரன். ஈச்வரனுக்கு முதலில் சந்திரன் காணப்படுகிறது. அண்டத்தில் முதலில் கார்த்திகை நட்சத்திரத்தில் சந்திரன் காணப்பட்டது. பிறகு இந்திரன் ஸர்வ இந்திரியங்களுக்கும் ராஜாவாகக் காணப்படுகிறன். இந்தமாதிரி ஈச்வரனை எண்ணப்படுவது ஸர்வ ஜனங்களாலும் ஒப்புக்கொள்ளக் கூடியது. ஈச்வரனின் பிரிவுகள். ப்ரும்மா, விஷ்ணு. சிவன், ப்ரும்மா என்பது சரீரத்திற்கு மூலப்பொருள். "ஜலத்தில் ஸர்வ தேவதைகளும் வாஸம் பண்ணுகிறது." விஷ்ணு என்பது சரீரம். பத்து துவாரங்களோடு கூடியது விஷ்ணு என்கிறது வேதம். சிவன் சரீரத்திற்குள் காணப்படும் ஜீவன். ஜடராக்னியில் இருக்கிறது சிவன். வயிற்றுக்

குள் வந்த ஆகாரத்தை எரித்துக் கொண்டிருக்கிறது ப்ரம்ம, விஷ்ணு, ருத்ராளை சரீர, லக்ஷண, காலத்தாலேயே பிரிக்கப்படுகிறது. ஈச்வரன் வேத ஸ்வரூபம். வேதத்தை நான்காகப் பிரித்து ஈச்வரனை கல்பனைச் செய்திருக்கிறார்கள். யஜுர் வேதம் ஈச்வர சரீரத்திற்கு மூலப்பொருள். ரிக்வேதம் ஈச்வர சரீரத்திற்கு எட்டு முக்கியமான எலும்புகள். ஸாமவேதம் ஈச்வர சரீரத்திற்கு நரம்புகள். அதர்வண வேதம் ஈச்வர சரீரத்திற்கு மல மூத்திரம். சுக்ல யஜுர் வேதம் ஈச்வர சரீரத்திற்கு சுக்ல சோணிதம். இவ்விதமான வேதஸ்வரூபமே ஒரு ஈச்வரன். " தாதா குறிப்பு"

உதயம் அல்லது ஆரம்பம். லோகோதயம் சூரிய உதயத்தால் ஏற்படுகிறது. சூரியன் உதிக்கும் இடத்திற்கு உதயம் என்றுபெயர். உலக உதயம் என்றால் கலியின் பிறப்பு. ப்ரபவ வருஷப் பிறப்பு. அச்வதி நட்சத்திர உதயம். சந்திரன் பிறப்பு. அமாவாசை முடிந்த சுக்லப்ரதமை பிறப்பு. சூரியக்ரஹணம். கேதுவின் பிறப்பு. இப்படியாக 8 க்ரஹகங்களோடு உதயமாகிறது. குழந்தைகள் பிறக்கிறதல்லவா? இதில்தான் உதயம் என்பது கௌரவப்படுகிறது. எப்படி? பகலிலும், இரவிலும் குழந்தைகள் பிறக்கிறது. குழந்தைகள் பிறந்ததும் சூரியன் உதித்த இடத்தில் எந்த லக்நம் உதிக்கிறதோ அதையே உதய லக்நம் என்கிறார்கள். கல்யாணங்களிலும் சூரியன் உதிக்கும் கிழக்கு திக்கில் உதயமாகும் லக்ந பலத்தை வைத்துக்கொண்டே முகூர்த்தங்களைச் செய்கிறார்கள். சூரியன் உதிக்கும் கிழக்கு திக்கில் சர்வ ஜனங்களுக்கும் வேண்டிய க்ஷேமத்தை கொடுக்கக் கூடிய சக்தியிருக்கிறது. தாதாவின் குறிப்பில் விசேஷம் இருக்கிறது.

ஊர்வசி. ஊர்வசி என்றால் யார்? அப்ஸரஸ் அல்லது தேவதாஸி என்று பெயர். இந்திரன், அக்நி, யமன், வருணன், வாயு என்பது போல் ஊர்வசி, மேனகை, அரம்பை க்ருதாசீ, திலோத்தமை என்ற தேவ மாதர்கள் இருக்கிறார்கள். அப்ஸரஸ் என்றால் ஜல தேவதை. அப்ஸரஸ் என்றால் ஜல ஓட்டம். நதி என்றும் சொல்லுகிறோம். கங்கைக்கு ஸரஸ்வதி என்று பெயர். நாக்குக்கும் ஸரஸ்வதி என்று

பெயர். நாக்கில் ஜலம் ஊருகிறது. அதனால் ஸரஸ்வதி என்ற பெயர் ஒத்துக்கொள்கிறது. பார்வதி இவள் ஹிமவானுடைய பெண். பனிக்கட்டிக்குப் பிறந்தவள். ஜல பர்வதத்திற்குப் பிறந்தவள். அப்ஸரஸ்ஸுக்கெல்லாம் மாதா. லக்ஷ்மி சமுத்ரத்தில் பிறந்தவள். சமுத்ரமும் ஜலம் தானே, இவளும் அப்ஸரஸ்ஸுக்கெல்லாம் உயர்ந்தவள். புராணங்களில் காணப்படும் அப்ஸரஸ்ஸுக்கும் இவர்களுக்கும் வித்தியாசம் தெரிகிறது. அப்ஸரஸ். இவர்களுக்கு சரீரம் உண்டு. இவர்கள் தேவலோகத்தில் இந்திர சபையில் நாட்டியம் ஆடுபவர்கள். காமத்தில் ஈடுபடும் காலத்தில் பாபிகளாக மாறுபட்டு பூமியில் வந்து சேருவார்கள். காம ஆசையை பூமியில் அனுபவித்து குழந்தைகளை ஜநிக்கச் செய்து தங்கள் பாபங்களைப் போக்கிக்கொண்டு தேவலோகம் போய் இந்திர சபையில் முன்போலவே நடனம் செய்வார்கள். அப்ஸரஸ்ஸுக்களுக்கு காம ஆசை சூரிய வம்சத்து ராஜக்களிடமோ சந்திர வம்சத்து ராஜக்களிடமோதான் ஏற்படும். ராஜக்களும் தேவசபையில் கந்தர்வனாகவாவது கட்டியக்காரனாகவாவது இருந்தான் என்று புராணங்களில் காணப்படுகிறது. "தேவதைகள் போகம் பண்ண வேண்டுமானால் இந்த பூமியில்தான் முடியும் என்று சொல்லப்படுகிறது." அப்ஸரஸ் ஸகல தேவதைகளின் வாஸஸ்தலம். ஊர்வசிக்குச் சரீரம் உண்டா? சூரியனுக்கு கை, கால், கண், சரீரம், ரதம், குதிரைகள் என்று எல்லாம் வர்ணிக்கிறார்கள். நாம் பார்க்கும் சூரியனுக்கு இவைகள் எல்லாம் இருக்கிறதா? அதேபோல அப்ஸரஸ்ஸுக்கும் அழகான சரீரத்தை வர்ணிக்கிறார்கள். சூரியனுக்குச் சரீரத் தன்மையை ஒப்புக்கொண்டால் அப்ஸரஸ்திரீகளுக்கும் சரீரத் தன்மையை ஒப்புக்கொள்ளுங்கள். மேனகை என்பவள் அப்ஸரஸ். அவள் பெண் சகுந்தலை. சகுந்தலை என்னும் குழந்தையை, மேனகை பூமியில் அனாதியாக விட்டுவிட்டு, தேவலோகம் போய்விட்டாள் என்கிறது புராணம். எதற்காக? நாம் அனாதிகாலமாக பூமியில் வசிக்கிறோம் என்று சொல்லுவதற்கே தேவர்களும் அப்ஸரஸ்ஸுக்களும் பூலோகத்தில் வந்து ப்ரஜைகளை உண்டுபண்ணினார்கள் என்கிறது புராணம். வேதார்த்தத்தை விஸ்தாரமாகச் சொல்லுகிறது. " தாதாவின் ஊக்கமான குறிப்பு."

என் தேசம். இந்து தேசத்தை ஐம்பத்தாறு தேசமாகப் பிரித்து, தமிழ் தேசம் என்னுடையது, மஹாராஷ்டிர தேசம் என்னுடையது, தெலுங்கு தேசம் என்னுடையது, என்று பிரித்துக் கொள்ளுகிறோம். என் கிராமம், என் வீடு, என் சரீரம் என்று பிரித்துக் கொள்கிறோம். வேத காலத்தவர்கள் சரீரத்தை 56 பாகமாகப் பிரித்தார்கள். சரீரத்தில் எந்த பாகம் அவசியம் என்றும், என்னுடையது எது? என்றும் விசாரித்தார்கள். தலை அவசியம், கண் அவசியம், காது அவசியம், கை அவசியம், கால் அவசியம்: எது வேண்டாம். எல்லாம் என்னுடையது என்கிறார்கள். அதேபோல இந்த அண்டத்தில் எல்லா பாகமும் அவசியம். "என் தேசம், என் தேகம்" தாதாவின் குறிப்பு.

ஏழு வாரங்கள். வானத்தில் தெரியும் ஏழுக்ரஹங்களாலேயே வாரங்களைச் சொல்லி வருகிறோம். ஏழு ஸமுத்ரங்கள், ஏழுமலைகள், ஏழு பூமிகள், ஏழு விருக்ஷங்கள், ஏழு ஜன விசேஷங்கள், ஏழு அண்டங்கள் எல்லாம் புராண விசேஷங்கள். எல்லா விசேஷங்களையும் இந்த அண்டத்திலேயே ஊஹிக்கவும். "அண்டம்போல் பிண்டம்"

ஐந்து ப்ராணன்கள். பராணன், அபானன், வ்யானன், உதானன், சமானன் என்ற ஐந்து விதப்ராணன்கள் சேர்ந்து சுவாஸம் எனப்படுகிறது. இந்த ப்ராணன்களில் எது முக்கியம், எது முக்கியமில்லை என்று கிடையாது. ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூத சாராம்சமே பஞ்ச ப்ராணனுகிய சுவாஸம்.

ஒன்பது த்வாரம். நவத்வாரங்கள் உள்ளவன் மனிதன். நவத்வாரங்களிலும், நவக்ரஹ தேவதைகள் காவல் செய்து வருகிறது. புருஷனுடைய ப்ராணன் நவத்வாரங்களிலும் சஞ்சரிக்கிறது என்கிறது வேதம்.

ஓடும் பூமி. பூமி ஓடுகிறது என்கிறார்கள். சூரியன் மேஷ ராசியில், விருஷப ராசியில், 12 ராசிகளிலும் ஓடுகிறது என்று, வேதகாலத்திலிருந்து சொல்லி வருகிறார்கள். மேல் நாட்டார்கள் பூமி ஓடுகிறது, என்று சொல்லுவதால் இந்த காலத்து உபாத்தியாயர்கள் பூமி மேஷ ராசியில் ஓடு

கிறது, விருஷபராசியில் ஓடுகிறது, 12 ராசிகளிலும் பூமி ஓடுகிறது என்கிருர்கள். உபாத்தியாயர்கள் நட்சத்திரங்களையும் ராசிகளையும் போதிக்கிருர்கள். அதில் பூமி ஓடுகிறது என்பது கவனிக்க வேண்டிய விஷயம். ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒரு தேவதை சொல்லப்பட்டிருக்கிறது. தேவதை ஸ்வாபவம் ஒன்று. மனிதர்கள் அனுபவிக்கும் போது இரண்டாக ஸ்வபாவம் மாறும். "அக்நி. ஒருவனுக்கு அக்நியால் லாபம். மற்ருெருவனுக்கு அக்நியால் நஷ்டம். வருணன். ஒருவனுக்கு ஜலத்தால் லாபம். ஒருவனுக்கு ஜலத்தால் நஷ்டம். இதுதான் தேவதைகள் ஸ்வபாவம்." ராசிகள் பெயர்களாலேயே ப்ரகாசிக்கிறது. ஆகாயக் காட்சியால், "நட்சத்திரக் கூட்டங்களால்," ராசி பெயர்கள் சொல்லப்படவில்லை. மேஷம். ஆட்டின் ஸ்வபாவம் அந்த ராசிக்கி உண்டு. ஆடு சாதுவானது. பயந்தது. நாட்டிலும், காட்டிலும், இரண்டு இடத்திலும் மேயத்தகுந்தது. எல்லோருக்கும் ஆஹாரமாகக் கூடியது. சிம்மராசி சிம்மம் பயப்படாதது, உயர்ந்த பார்வை உடையது, தைர்யமுள்ளது. காட்டில்தான் இருக்கலாம். நாட்டில் வந்தால் கட்டுப்படவேண்டியது. மனிதஸ்வபாவத்தால் கட்டுப்படுத்தக் கூடியது. இதேமாதிரி "ராசிகள்" பெயர்களின் ஸ்வாபவத்தாலேயே ப்ராகாசிக்கிறது. தாதாவின் குறிப்பு"

ஔரஸன். ஒருவன் உடம்பிலேயே ஊறிப் பிறப்பவன் "ஔரஸன்" எனப்படுகிறது. ஔரஸன் புத்திரன் எனப்படும். மனிதனுக்கு நவத்வாரங்களிலும் காற்றுச் செல்கிறது. 10 வது த்வாரம் தொப்பிள். தொப்பிள் கொடி வழியாகவே குழந்தை கர்ப்பத்தில் வளருகிறது. தொப்பிள் கொடியோடு கூடின 10 த்வாரங்களும் சேர்ந்த குழந்தையே ஔரஸன் எனப்படும். லீலாவதியின் சொந்தக் குறிப்பு " தாதா விஷ்ணுவின் வயிற்றில் இந்த பூமி இருக்கிறது என்று சொன்ஞர். விஷ்ணுவின் தொப்பிளில் தாமரைப் புஷ்பம். அந்த புஷ்பத்தில் ப்ரும்மா, என்ருல் ப்ரும்மா அண்டத்தின் வெளியிலும் நாம் விஷ்ணுவின் வயிற்றிலும் இருக்கிரேும்" ஔரஸன் முதலில் பூமியில் தாஞகவே ஜநித்தான். ஆகாயத்தில் 8 க்ரஹங்களும் ஒரே இடத்திலிருந்து ஓட ஆரம்பித்த பிறகு மனித வர்க்கம் ஜநித்திருக்கவேண்டும். மீனிலிருந்தும்,குரங்கிலிருந்தும்,

கரடியிலிருந்தும் மனித வர்க்கம் உண்டாயிருக்கலாம் என்ற ஆராய்ச்சிகளை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஆராய்ச்சி காலத்திலிருந்து தனி மனித ஜாதி உண்டாகி யிருக்கிறதா? இல்லை. காரணம் இல்லாமல் பழய காலத்தின் மேல் தப்பான அபிப்ராயங்களை சுமத்தக்கூடாது. குழந் தைகளின் லக்ஷணம். ஒருவனுக்கு தலைமயிர் சுருட்டை. அவன் பிள்ளைக்கும் தலை மயிர் சுருட்டையாகவே காணப் படுகிறது. ஒருவனுக்குக் கண் வக்ரம். அவன் பிள்ளைக்கும் கண் வக்ரம். ஒருவனுக்கு மூக்கு வளைவு, அவன் மகனுக் கும் மூக்கு வளைவு. இவர்கள் ஒளரஸர்கள். ஈச்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவையும் மனிதன் பார்த்து ஒப்புக்கொள்கிறான். எதை? ஆண் பக்ஷிகள் "லக்ஷணம்" சரி. ஆண் மிருகங்கள் லக்ஷணம் சரி. ஸ்திரீகளின் லக்ஷணம் சரி. கிளை இல் லாத மரங்களில் பெரிய பழங்கள் இருப்பது சரி. கிளைகள் உள்ள மரங்களில் சிறிய பழங்கள் உதிர்வது சரி என்று தங்கள் புத்தியாலேயே ஒப்புக்கொள்கிறார்கள். சிருஷ்டித்த ஈச்வர புத்தியும் சிருஷ்டி வஸ்துக்களை ஒப்புக்கொள்ளும் புத்தியும், பிதாவும் புத்திரனுமாகிறது. யுக ஆரம்பத்தில் தாயார்கள் இல்லாமலேயே உண்டான புருஷர்களும், ஸ்திரீகளும் ஒளரஸர்கள். விஷ்ணுவின் பின்னங்கள். "தாதாவின் குறிப்பில் கடினம்"

ராம ஜனனம். ஸ்ரீ ராம ஜனனம் என்கிறார் வால்மீகி மஹரிஷி. மஹரிஷி எந்தகாலத்தவர். வேத காலத்தவரா? கலியுகத்திற்கு முந்தின காலத்தவரா?

வேதகாலத்தவர். கலியுகத்திலேயே ராமாயணத்தை ஜனங்களின் நன்மைக்காக யாகம் செய்துகொண்டிருக்கை யில் எழுதியது. காலத்தையும், யாகத்தையும் ராமாயண மாக எழுதியவர். ராமநவமி என்பது பங்குனிமாத அமா வாசை கழிந்தபிறகு ஆரம்பிக்கப்படுகிறது. காலத்தின் ஆரம்பம் வருஷத்தின் ஆரம்பம் என்று வைத்துக்கொள்ள லாம், யுக ஆரம்பமும் இதுவே. அண்ட நாயகன் ஒருவன் உண்டு என்று எண்ணுகிறார். பூமியை சீதை என்கிறார்.

பூமியில் ஜனிக்கும் மனிதர்கள் எப்படி உண்டானார்கள். எதற்காக? யார் நம்மை ப்ரயோஜனப்படுத்திக் கொள்

கிறார் என்ற அறிவு வருவதற்கே அனேக கல்பனைகளை ராமாயணத்தில் எழுதியிருக்கிறார். பூமி இல்லாமல் சூரியன் மாத்திரம் ஆகாசத்தில் இருந்தால் என்ன ப்ரயோஜனம். சூரியன் இல்லாமல், பூமி தனியாக இருந்தால் பூமியில் எது உயிரோடு இருக்கமுடியும். பூமியும், சூரியனும் இருந்தால் போதுமா? காற்று அவசியம் வேண்டுமே? ராமாயணத்தில் காற்றுக்கு, வாயு புத்திரன் ஹநுமான் என்ற பெயரை கல்பனை செய்துகொண்டார். சூரியன் ராமன், பூமி சீதை, வாயு ஹநுமான். இந்த மூன்றையும் எப்படிச் சேர்ப்பது. எப்படிப் பிரிப்பது. ராமாயணத்தை படித்தவர்கள் தங்கள் வயதுக்குத் தகுந்தவாறும், புத்திக்குத் தகுந்தவாறும் ஊஹித்துக்கொள்ளும்படி எழுதியிருக்கிறார். ராமஜனனத்தில் ஆகாயக் காட்சியை அலங்கரிக்கிறார் மஹரிஷி. நவக்ரஹங்களோடு பூமியையும் சேர்த்துவிட்டார். ராமர் சுக்கில பக்ஷ நவமியில் பிறந்தார். சூரியன் மேஷத்தில் இருக்கிறான். புனர்பூச நட்சத்திரம். சந்திரன் கடகராசியில் இருக்கிறான். இதனால் சித்திரை மாதம் என்பது தெரிகிறது. 60 வருஷங்களில் எந்த வருஷத்தையும் மஹரிஷி எழுதவில்லை. மற்ற க்ரஹங்களை உயர்ந்த நிலையில் இருந்தது என்று எழுதியிருக்கிறார்.

சீதா ஜனனம். ஜனக்ர் பூமியை உழும்போது பூமியிலிருந்து பெட்டியோடு எடுக்கப்பட்டாள் என்கிறார். ராமர் புத்ரகாமேஷ்டி யாகம் செய்தபிறகு பிறந்தார். "சீதை,யாக ஆரம்பத்திலேயே பிறந்தாள். புருஷ ப்ரஜைக்கு கர்மா செய்யப்படுகிறது." ஸ்திரீகளுக்கு மந்திரம் இல்லாமல் கர்மா செய்யப்படுகிறது.

ஹநுமான் ஜனனம். ஹநுமான் பிறந்ததும் சூரியக்ரஹணம் ஏற்படுகிறது என்கிறார். எதற்காக? ஹநுமான் பிறந்ததும் சூரியனை பழம் என்று நினைத்தது. ஆகாயமண்டலத்தில் தாவிப்பிடித்தது. கேதுவும் அதே சமயத்தில் சூரியனை பிடிக்க ஆரம்பித்தது. சூரியன் ஹநுமானால் பிடிபடவே கேது ஸ்பரிசம் ஆகவில்லை. தேவதைகளால் நடக்க வேண்டிய காரியம் தடைபடவே தேவேந்திரன் தடை செய்யும் ஹநுமான் கன்னத்தில் வஜ்ராயுதத்தால் அடித்தான். அடிபட்ட ஹநுமான் சூரியனைவிட்டு,

ஓடிவிட்டது. ஹநுமானின் கன்னத்து அழகு போய்விட்டது. சூரியனை ஹநுமான் விட்டதும் சூரிய க்ரஹணம் ஏற்பட்டது என்ற ஓர் கல்பனையை அழகாக செய்திருக்கிறார் மஹரிஷி. இந்தக் கதையை நாம் எப்படி ஒப்புக்கொண்டோம். நமது மனது இடம் கொடுக்கிறதா என்பதை ஊஹித்துப் பாருங்கள்? ராமர் சீதையைத் தேட ஹநுமானை அனுப்பினார் என்கிறார்; யுக ஆரம்ப தினத்தில் அண்டத்தில் காற்று எப்படி உண்டாயிற்று. பூமியின் மேல் சூரிய கிரணம் எப்படி ஸ்பரிசித்தது என்பதை ஊஹித்து நமக்கு ராமதூதன் சீதையைக் கண்டான் என்கிறார். யுகம் பிறந்த முதல் நாள் சூரியனின் கிரணம் வாயு மண்டலத்தின் வழியாக ஊடுருவி வந்து பூமியை ஸ்பரிசித்தது என்பதே ரிஷியின் வாக்கியம். இது ராமயணத்தின் சாரமான பாகம்.

ஹநுமான் கன்னத்தில் இந்திரன் அடித்தாகச் சொல்வதை கவனி. சீதை ஸ்திரீ அல்லவா? அவளிடம் பலிஷ்டரான ஹநுமான் போய் தூது சொன்னார் என்றால் அதில் சந்தேகம் ஏற்படும். ஹநுமான் கன்னத்தில் கிழத்தனம் காணப்படுகிறதாம். புருஷனோ, ஸ்திரீயோ, யௌவனம் என்றால் அவர்கள் கன்னத்தில்தான் தெரியும் என்கிறார் ரிஷி. ஹநுமான் கன்னத்தில் கிழத்தனம் காணப்படுவதால் சீதையிடம் தூது செல்வதற்குத் தகும் என்று எழுதியிருக்கிறார். ராமன் தாரக பரப்ரம்மம். "நவக்ரஹங்கள் நட்சத்திரங்கள் பூமி இவைகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சொல்வதுதான் தாரக பரப்ரம்மம்" தாதாவின் குறிப்பு

தாரை. தாரை என்றால் நட்சத்திரம். ராமாயணத்தில் தாரை என்று வாலியின் சம்சாரத்திற்குப் பெயர் வைத்திருக்கிறார். எதற்காக? வாலியும் சுக்ரீவனும் எப்பொழுதும் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். வாலி எப்பொழுது சண்டைக்கிப் போனாலும் தாரை தடுப்பதே இல்லை. தடுக்காத தாரை, சுக்ரீவனோடு வாலி சண்டைக்கிப் போகும் போது தடுத்தாள். தாரை தடுத்தும் வாலி கேட்காமல் சுக்ரீவனிடம் சண்டைக்குப் போய் ராமபாணத்தால் அடிபட்டுத் திரும்பி வரவேயில்லை என்று எழுதியிருக்கிறார்

மஹாரிஷி. இதில்தான் என்ன? தாரா பலன் நன்றாக இல்லாவிட்டால் நாம் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. வாலியைப் போல் பலசாலி யாருமே இல்லை. அப்படி பலசாலியாக யிருந்தும் "நட்சத்திரம்" தாரை தடுத்ததே? தாராபலன் இல்லாததால் வாலி திரும்பி வரவில்லை என்று எழுதியிருக்கிறார் வால்மீகி மஹாரிஷி. "தாதாவின் குறிப்பு ராமாயணத்தின் குறிப்பை முழுவதிலும் அடுத்த புத்தகத்தில் எழுதுகிறேன் லீலாவதி.

பாரதத்தில் தாரை. வேதவியாசர் தாராசசாங்கம் என்று ஒரு கதையை எழுதியிருக்கிறார். வேதவியாசர் யார்? வால்மீகி யார்? வால்மீகி முந்தியவரா? வேதவியாசர் முந்தியவரா? வால்மீகி த்ரேதாயுகத்தைச் சொல்லுகிறார். வேதவியாசர் துவாபரயுகத்தைச் சொல்லுகிறார். இரண்டு பேரும் வானத்தில் இருக்கும் நவக்ரஹங்களைக்கொண்டும் நட்சத்திரங்களைக்கொண்டும் கதைகளைச் சொல்லுகிறார்கள் இவர்களில் எவர் முந்தியவர் பிந்தியவர் என்று சொல்ல முடியாது. இரண்டுபேரும் வேதகாலத்தவர்கள்தான். இரண்டுபேருக்கும் ஒரே பாஷைதான் என்று தெரிகிறது. வேதத்தையே ஆதாரமாகக்கொண்டுதான் புராணக்கதைகளை எழுதியிருக்கிறார்கள். இவர்கள் வானத்தில் க்ரஹங்களை ச்ரமப்படாமல் கண்டுபிடித்து அவைகளுக்குப் பொருத்தமான பெயரையும் நடந்ததாக எண்ணக்கூடிய கதைகளையும் சிருஷ்டித்தார்கள். "மேல்நாட்டார்கள் புதிய க்ரஹங்களை கண்டுபிடித்ததாகச் சொல்லுவதற்குப் பலன் கண்டுபிடிக்கமுடியாது".

தாராசசாங்கம்: தாரை என்பவள் குருவின் பத்நி என்கிறார் வேதவியாசர். தாரை என்பது நக்ஷத்திரம். குரு என்பது ஓர் க்ரஹம். இந்த இரண்டுமாக தர்மயோக க்ஷேமம் செய்கிறது என்றார். வானத்திலே காணப்படும் சந்திரன் குருவினிடம் சிஷ்யனாக வருகிறான். குரு குலத்தில் சில காலம் பழகியதும் குருபத்நி ஸ்நேகம் உண்டாகிறது. அதன் பலனாக "புதன்" சந்திரனுக்குப் பிள்ளையாக உண்டானான் என்று எழுதிவிட்டார் வேதவியாசர். ஆகாயத்தில் காணப்படும் க்ரஹங்களுக்குச் சரீரம் உண்டா? இதில்தான் என்ன ஆராய்ச்சி? பாரத தேசத்திற்கு இந்தக் கதை ஒன்றே போரும். வேதவியாசர்

அனேகந்யாயங்களை கூறுவதற்கு இந்த கதையை எழுதியிருக்கிறார்.

க்ஷேத்ரந்யாயம்: குருவின் மனைவி தாரை என்பவள் க்ஷேத்ரம் எனப்படுகிறது. க்ஷேத்ரம் என்றால் நிலம். ஒருவன் தன் நிலத்தை வைத்துக்கொண்டு மற்றொருவனிடம் சோளவிதை வாங்கி தன் நிலத்தில் நட்டான். விதை முளைத்து சோளம் செடியாகி கொண்டைவிட்டது. சோள விதை கொடுத்தவன் சோளக் கொண்டையை அறுத்தான். நிலத்தின் சொந்தக்காரன் சோளக் கொண்டையை அறுக்காதே! என் பூமியில் விளைந்தது என்று சண்டை போட்டான். இப்படி பூமியில் ஜனங்கள் ந்யாயம் தெரியாமல் சண்டை போடுவார்கள் என்கிறார் வேதவியாசர். இதன் முடிவு என்ன? யாருடைய பூமியோ அதில் பிறர் விதை கொடுத்தபோதிலும் பூமியின் சொந்தக்காரனே கதிர் அறுக்கவேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறார். இந்தக் கதையால் என்ன விசேஷம் குருவின் மனைவி தாரை க்ஷேத்திரமாம். க்ஷேத்திரமாகிய பூமியில் சந்திரன் விதை விழுந்ததாம். அவன்தான் புதன். புதன் யார் பிள்ளை. குரு தன் பிள்ளை என்பதற்கு க்ஷேத்ரந்யாயம் சொன்னார் என்கிறார் கல்பனைசக்தியுள்ள வேதவியாசர். நாமும் ஊஹிப்போம்.

பீஜந்யாயம். சந்திரன் புதனைத் தன் பிள்ளை என்பதற்கு பீஜந்யாயம் கேட்கிறான். வேதவியாசர் என்ன நினைக்கிறார்? தாரைகர்ப்பத்திலிருந்து, புதன் வெளிப் பட்டான். புதன்குணம், சந்திரன் குணம்போல் இருக்கிறது. இதற்கு உபமானம் வேப்பமரம். அரசமரத்தில் வேப்பமரம் முளைக்கிறது. வேப்பங்கொட்டை அரசமரத்தில் விழுந்ததால் முளைத்தது. அரசமரத்தின் மேலேயே வளர்ந்து பூத்துக் காய்ப்பதை லோகத்தில் பார்க்கிறோம். அரசமர சம்பந்தத்தால் ஏற்பட்ட குணங்கள் வேப்பமரத்தில் காணப்படவில்லை. பூமியில் தனியாக முளைத்த வேப்பமரத்தின் புஷ்ப, பழகுணம்தான் இரண்டிலும் காணப்படுகிறது:

வேப்பம்பழம் கசக்கிறது. அரசம்பழம் கசக்கவில்லை. அரசமரத்தில் காணப்படும் வேப்பமரத்திற்கு அரசமரம்

தான் க்ஷேத்திரம். க்ஷேத்திரத் தன்மை வேப்பமரத்திற்கு ஏற்படவில்லை. பீஜத்தின் குணம்தான் இருக்கிறது. இதனல் வேத வியாசர் புதன் சந்திரன் பிள்ளை என்று எழுதியிருக்கிறார். வானத்தில் காணப்படும் க்ரஹங்களை உபமானமாக வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு ந்யாயத்தை காட்டுகிறார்.

பீஜந்யாயத்தில் சந்தேகம். அரசமரத்திலேயே வேப்ப மரத்தின் வேர் காணப்படுவதில்லை? பூமியில் வேர் இறங்கி விடுகிறது?

பில்லுளியைப்பார். வேரே கிடையாது. மாமரம், பூவரசு, வில்வம் முதலிய விருக்ஷங்களில் பில்லுளிசெடி உண்டாகிறது. மேலே சொன்ன விருக்ஷங்களில் கிளை போல் காணப்படும். பில்லுளியின் பழம் கொழ கொழப்பாயும் கொஞ்சம் தித்திப்பாயும் இருக்கும். புஷ்பம் கொத்தாக இருக்கும். இலை தடிப்பாக யிருக்கும். இந்த இலைகளை ஆடு தின்னும். பழத்தை பக்ஷிகள் தின்னும். வேப்பம் கொட்டை எப்படி அரசமரத்தில் முளைக்கிறதோ அதே போல பில்லுளி விதையும் மரங்களில் விழுந்து முளைக்கும். இதற்கு க்ஷேத்திரம் பூவரசு, பில்வம், மா முதலான மரங்கள். பில்லுளியின் பழம் மரத்திற்குத்தகுந்த குணத்தைக் கொள்ளாது. பீஜத்தின் சாரம்தான் பழத்திலும் காணப்படுகிறது.

வேதவியாசர் எந்தக் காரணத்தைக்கொண்டு தாராசசாங்கம் என்ற கதையை எழுதினர் என்பதை கவனியுங்கள். ப்ரஜாபதியின் பத்நீ ரோஹிணீ என்றும் ஸோமராஜாவின் பத்நீ ரோஹிணீ என்றும் வேதத்தில் இருக்கிறது. தாரை நட்சத்திரத்தை குறிக்கிறது. நட்சத்திரங்களில் ரோஹிணிதான் ப்ரதானம். வேதத்தால் அண்டபுருஷனை பிரார்த்திக்கும்போது "ரோஹிணி" அண்டபுருஷனின் நாக்கை குறிக்கிறது. ஜோதிஷர்கள் பலன் சொல்லும் காலத்தில் 27 நட்சத்திரம் என்கிறார்கள். சந்திரன் ஓடுவதை கணக்குப் பண்ணும்போது 27½, அதாவது 28 நட்சத்திரங்கள் என்கிறார்கள். ½ நட்சத்திரத்திற்கு அபிஜித் நட்சத்திரம் என்று பெயர். வேதத்தில் 28 நட்சத்திரங்கள் என்றும், ரோஹிணியிலிருந்து "26"ம் கார்த்திகை

கூட்டங்கள் ஏழும் "7" ஆக 33 என்று இருக்கிறது. ஏழுக்கும் பெயர்கள் உண்டு. அம்பா, துலா, நிதத்நி, அப்ரயந்தி, மேகயந்தி, வருஷயந்தி, சுபுணீகா என்ற பெயர்கள் கொண்டது கார்த்திகை நட்சத்திரம். 33 நட்சத்திரங்கள் எதற்கு? அவைகளால் அண்ட நாயகனுக்கு உள்ள சௌகரியம்? 32 நட்சத்திரங்கள் 32 பற்கள். ரோஹிணி நட்சத்திரம் நாக்கு. ஆக 33. பற்கள் செய்யும் வேலைகளை நாக்குத்தான் செய்கிறது. குழந்தைக்கு பல் இருக்கிறதா? வயதானவர்களுக்கு பற்கள் இருக்கிறதா? பற்கள் உண்டாகி உதிர்ந்துவிடுகிறது. நட்சத்திரங்களை பற்களுக்கு உபமானமாகச் சொல்லுகிறோம். வேதத்திலும் பற்களை நட்சத்திரங்களாக உபமானம் சொல்லப்பட்டிருக்கிறது. ரோஹிணீ என்பது நாக்கு. நாக்கில் ஊறும் ஜலம் சந்திரனைச் சேர்ந்தது. ரஸ தேவதை சந்திரன் "ரஸம் ஜலம்" நாக்கினால் பேசுகிறோம். நாக்கில் ஜலம் ஊராவிட்டால் பேச முடியவில்லை. பேசுவது என்பது வாக்கு. வாக்கு தேவதைப் ப்ரஜாபதி. வாக்கு குருவுக்கும், ரஸம் சந்திரனுக்கும், "நாக்கு தாரை" வாக்கு ரஸம் நிரம்பிய அக்ஷரத்திற்கும் தாரை பத்நீ என்று உபமானமாகிறது. அநுகூலமானது பத்நீ என்று சொல்லப்படுகிறது. அக்ஷரத்தில் சப்தமும் எச்சில் திவிலையும் காணப்படுகிறதல்லவா? எச்சில் திவிலைதான் புதன். சப்தம் மறைந்துவிடுகிறது. "வாக்குகுரு" எச்சில் திவிலை ரஸம் தெரிகிறது. நாக்கிலிருந்து சப்தமும் திவிலையும் நழுவி விட்டது. "திவிலை" புதன் சந்திரனுடையது என எழுதியிருக்கிறார் வேத வியாசர். கெடுதலான கல்பனை அல்ல. வேதார்த்தத்தை அனுசரித்து புராண ரகஸ்யங்கள் எழுதப்பட்டது. "தாதாவின் குறிப்பு" லீலாவதி தன் குறிப்பில் தாதா குறும்பான விஷயங்களையும் சமாதானப்படுத்துகிறார்.

துருவதரிசனம். துருவனையும் அருந்ததீயையும் பார் என்று புரோகிதர்கள் கல்யாணத்தில் நட்சத்திர தரிசனம் செய்து வைக்கிறார்கள். இது எது? வேதவியாசர் துருவ சரித்திரம் எழுதி துருவ மஹாராஜ வடக்கில் நட்சத்திரமாகப் ப்ரகாசிக்கிறார் என்று எழுதியிருக்கிறார். துருவ மஹாராஜா எப்படி நட்சத்திரமாக மாறமுடியும். நட்சத்திரங்களுக்

காக கதைகள் எழுதப்பட்டதா? கதைகளுக்காக நட்சத்திரங்கள் வானத்தில் காணப்படுகிறதா? இக்காலத்தில் கதைகளை "புராணங்களை" ஆராய்ந்து பார்த்து உண்மைகளைச் சொல்ல வேண்டும். இந்த விஷயங்களை வான சாஸ்திரிகள் அதிகமாக விசாரிப்பதில்லை. ஸப்தரிஷி மண்டலத்திற்கும் வடக்கில் இருக்கிறது துருவ நட்சத்திரம் என்கிறார்கள் பௌராணிகர்கள். ஸப்தரிஷி மண்டலத்தில் 6 வது நட்சத்திரம் வஸிஷ்டர். அதன் சமீபமாக உள்ள ஓர் சிறிய நட்சத்திரம் அருந்ததீ உத்தம பத்நி, அவளைப் போல நீயும் தர்ம பத்நீயாக இறுக்கவும் என்று பர்த்தா விவாகத்தில் நட்சத்திரத் தரிசனம் செய்து வைக்கிறான் என்கிறார்கள். லக்ஷ்மணன் பத்நி ஊர்மிளை என்பவள் "துருவம்" சாச்வதமானது என்று வடக்கு திக்கை சுட்டிக்காட்டுகிறாள்."

துருவ தரிசனம். புருஷன் தன் பத்நீயைப் பார்த்து நாம் இருவரும் தர்ம ப்ரஜைகளை உண்டாக்கவேண்டும். அந்த ப்ரஜைகளை நம்முடையது என்று எத்தனை காலம் சொல்ல முடியும். நாம் நூறு வயது சிரஞ்சீவிகளாக இருப்போம். அதன் பிறகு நம்மால் உண்டாக்கப்பட்ட ப்ரஜைகள் யாருடையது? பூமியினுடையது.

பூமியில் உண்டாகும் வஸ்துக்களை யார் தன்னுடையது என்கிறார்? அதுதான் துருவம். பூமியை ஆகர்ஷித்து ஒரே நிலையில் வைப்பது வடக்கு. துருவனை வடக்கே பார் என்கிறார்கள். வடக்கு திக்கிற்குத் தனியான சத்தியை வேதவியாசர் கண்டுபிடித்திருக்கிறார். இதையே துருவ சரித்திரமாகவும் துருவ தரிசனமாகவும் சொல்லவும் செய்தும் வைக்கிறார்கள். இக்காலத்து விக்ஞாநிகள் இரும்பானது வடக்காக இருக்குமேயானால் காந்த சக்தியை அடைகிறது என்றும் காந்த ஊசியால் வடக்கு திக்கு கண்டுபிடிக்கப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். சகல ஜீவராசிகளின்பிரயோஜனமும் துருவத்தைச் சேர்ந்தது என்கிறார்கள் மஹரிஷிகள். "தாதாவின் குறிப்பு" லீலாவதி தன் குறிப்பில் தாதா வடக்கு, கிழக்கு இரண்டு திக்கையும் உயர்ந்தது என்கிறார். நாம் பார்க்கும் வஸ்துவெல்லாம் வடக்கிலேயே தன் ஜீவனை ஒப்புவித்தல் போலவும் அதன்

வழியாக ஆகாயமண்டலம் ப்ரகாசிப்பதாகவும் தாதாவின் குறிப்பால் தெரிகிறது.

வேதத்தில் நட்சத்திரம். நட்சத்திரம் என்று ஏன் பெயர் வந்தது. க்ஷத்திரிய ராஜாக்கள் அநேகம்பேர்கள் இருந்தார்கள். அவர்கள் ராஜ்யங்களை ஆளாமல் ப்ரம்மத்தைக் குறித்து தபஸ் செய்தார்கள். ராஜ்யங்களில் ராஜாக்கள் இல்லாததால் தேவதைகளுக்கு ஜனங்களால் எவ்வித ஹவிஸ்ஸும் கிடைக்கவில்லை. தேவதைகளுக்கு ராஜாவாகிய தேவேந்திரன் இதைத் தெரிந்துகொண்டு க்ஷத்திரியர்களுடைய க்ஷத்ரத்தன்மையை பிடிங்கிக்கொண்டான். அதன் பிறகு ராஜாக்கள் நக்ஷத்ரமாகிவிட்டார்கள். நட்சத்திரம் இந்திரிய அணு. அனேக நட்சத்திரங்களின் அணுக்கள் இந்திரியம். இந்திரியத்தில் ஜீவன் இருந்தால் இந்திரன். "தாதா குறிப்பு"

குறிப்பு: வேத நட்சத்திரம். 1 ஒவ்வொரு நட்சத்திரத்திலும் தேவதைகளின் வீர்யம் இருக்கிறது. 2 ஒவ்வொரு நட்சத்திரமும் தேவதைகளின் வீடுகள். 3 நட்சத்திரங்கள் பசுக்கூட்டங்கள். 4 நட்சத்திரங்கள் பூத கணங்கள். 5 நட்சத்திரங்கள் வஸ்திரம். 6 நட்சத்திரங்கள் ருத்ர கணங்கள். 7 நட்சத்திரங்களின் சாரமே சந்திரன்.

ராமயணத்தில் நட்சத்திரம். வால்மீகி நட்சத்திரங்களை ரிஷிகள் என்கிறார். பூமியை சீதை என்கிறார். ராமனை சூரியன் என்கிறார். சூரியன் உதயமானதும் நட்சத்திரங்கள் மறைந்துவிடுகிறது. பூமி மாத்திரம் சூரிய திருஷ்டியில் காணப்படுகிறது. இதை வைத்துக்கொண்டு ராமன் ஏக பத்நீ வ்ரதன் என்கிறார். ராமர் வனவாசம் செய்யும்போது ஒவ்வொரு ரிஷி ஆச்ரமங்களிலும் தங்குகிறார். ரிஷிகள் அக்நிஹோத்ரத்தை செய்துகொண்டு ராமரையும் அதிதியாக வரவேற்று உபசரித்து, தாங்கள் செய்யும் அக்நிஹோத்ர பலன் ராமரைச் சேரட்டும் என்கிறார்கள். ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சூரியன் ஊர்ந்து செல்வதை மஹரிஷிவானத்தில் பார்த்துவிட்டு நட்சத்திரம் ரிஷிகள் ஆச்ரமமாகவும்; சூரியனை ராமனாகவும்; வர்ணித்திருக்கிறார். நட்சத்திரங்களில் கிடைக்கும்பலனை சூரியன் அடைகிறான். திரேதாயுகத்தில் நட்சத்திரங்களை ரிஷிகளாகவும் சூரியனை ராமனாகவும் வர்ணித்திருப்பது மஹரிஷியின் ஆராயச்சியே. தாதா

வின் குறிப்பு லீலாவதி தன் குறிப்பில் ராமாயணம் பூரா வும் மாற்றியிருக்கிறார்.

பாரதத்தில் நட்சத்திரங்கள். வேதவியாசர் க்ருஷ்ண பகவானைச் சந்திரனாகவும், நட்சத்திரங்களை கோபிகாஸ்திரீ களாகவும் வர்ணித்திருக்கிறார். நட்சத்திரங்கள் மேலே சந்திரன் ஊர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். "ராம னுக்கு ஏகபத்நீவ்ரதம், க்ருஷ்ணனுக்கு பதினாலாயிரம் கோபிகா ஸ்திரீகள்" உண்மையில் இரண்டும் ஆகாய விசேஷங்கள். சந்திரன் அநேக ஆயிர நட்சத்திரங்க ளோடு காணப்படுவதை த்வாபர யுகத்தில் நட்சத்திரங்கள் கோபிகாஸ்திரீகளாகவும் சந்திரனை க்ருஷ்ணனாகவும் வேத வியாசர் வர்ணித்திருக்கிறார். "தாதாவின் குறிப்பு"

கோ. ப்ராம்மண ஸ்துதி. இதனால் சர்வ ஜனங்களுக் கும் க்ஷேமம்.

பசு, பகலில் காட்டில்போய் மேய்ந்து வருகிறது. இர வில் மேய்ந்த புல்களை அசை போடுகிறது. அசை போடுவ தால் பால் சுறந்து குழந்தைகளை வளர்க்கிறது. வேத ப்ராம்மணன் ப்ரம்மசர்ய காலத்தில் வேதத்தை கற்று க்ருஹஸ்தாச்ரமத்தில் வேதார்த்தங்களை அங்கங்களோடு தெரிந்துகொண்டு ஜனங்களுக்கு ஞானப் பால் ஊட்டுகிறான். "தாதாவின் குறிப்பு"

தாதா, லீலாவதி வேதத்தில் முதல் நட்சத்திரம் எது?

தாதா: கார்த்திகை வேதத்தில் முதல் நட்சத்திரம். வானத்தில் குறிக்கப்படுவதும் கால ஆரம்பமும் அச்வதி நக்ஷத்திரம்தான். அச்வவாஹனன் கலி என்று சொல்லி யிருக்கிறாய். வடபா என்றால் பெண் குதிரை, அக்னி என்று சொல்லியிருக்கிறாய், பொதுவாக அக்னியோடு கூடியபுரு ஷன் அச்வ வாஹனன், கலி என்று சொல்லியிருக்கிறாய். கலியுகம் என்பதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றாள்.

லீலாவதி: பூஜைக்கு எல்லாம் எடுத்து வைத்திருக்கிறாயா?

தாதா: எல்லாம் வைத்தாகி விட்டது. பால் அபி ஷேகத்துக்கு இல்லை. மாதுளம்பழத்தை உதிர்த்து முத்துக்களை வெள்ளி வேலால் குத்தி வெள்ளை வஸ்திரத் தில் போட்டு பிழிந்து வெள்ளிக் கிண்ணத்தில் வைத்திருக் கிறேன் என்றாள் லீலாவதி.

தாதாவின் முதல் புத்தகம் முற்றிற்று.

1 பிரபவ
விபவ
சுக்ல
பிரமோதூத
பிரஜோத்பத்தி
ஆங்கீரஸ
ஸ்ரீமுக
பவ
யுவ
தாது
ஈச்வர
பகுதான்ய
2 ப்ரமாதி
விக்ரம
விஷு
சித்ரபானு
சுபானு
தாரண
பார்த்திவ
வ்யய
ஸர்வஜித்
ஸர்வதாரி
விரோதி
விக்குருதி
3 கர
நந்தன
விஜய
ஜய
மன்மத
துர்முகி
ஹேவிளம்பி
விளம்பி
விகாரி
சார்வரி
ப்லவ
சுபகிருத்
4 சோபகிருத்
க்ரோதி
விச்வாவசு
பராபவ
பிலவங்க
கீலக
ஸௌம்ய
ஸாதாரண
விரோதிகிருத்
பரீதாபி
ப்ரமாதீச
ஆனந்த
5 ராக்ஷஸ
நள
பிங்கள
காளயுக்தி
ஸித்தார்த்தி
ரௌத்ரி
துன்மதி
துந்துபி
ருத்ரோத்காரி
ரக்தாக்ஷி
க்ரோதன
அக்ஷய

தேசத்தால் வருஷங்கள் மாறபட்டிருப்பதை கவனித்துக்கொள்.

Printed at the
KESARI PRINTING WORKS
37, Sir Thyagaraya Road, T'Nagar, Madras.
P. I. C. No. M S. 170.—Copies—1500—16-6 '47

இப்புத்தகம் கிடைக்குமிடம் :

**V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்**

**நெ. 9, அஜிஸ்நகர்,**

கோடம்பாக்கம்

*அக்பராபாத்* B. P. O.